# அரசு ஊழியர்

ஜனவரி 2021

மலர் : 42 இதழ் : 1

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர் : **மு.அன்பரசு**

ஆசிரியர் : **ஆ.செல்வம்**

ஆசிரியர் குழு

**மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன், இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி**

முகவரி : பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,

19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,

எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,

சென்னை 600 002.


ஆண்டுச் சந்தா : ரூ.100 தனி இதழ் ரூ.10


## சூடா ஒரு கோப்பை சூப்

### நண்பனே...!

LIC பங்கு விற்பனை என்றேன்.
நான் பாலிஸி எடுக்கவில்லை என்றாய்!
பொதுத்துறை விற்பனை என்றேன்.
நான் தனியார்துறை தோழர் என்றாய்!
இரயில்வே விற்பனை என்றேன்.
நான் போவது காரில் தோழர் என்றாய்!
விமானசேவை விற்பனை என்றேன்.
அதிலெல்லாம் நான் போவதில்லை என்றாய்!
விவசாயம் விற்பனைக்கு என்றேன்.
நான் சோறே திண்பதில்லை என்பாயோ..?

வாட்ஸ் ஆப் கவிதை



தலைவர் மடல்

## உலகப் போராட்ட வரலாற்றில் சரித்திரம் படைத்திட்ட இந்திய விவசாயிகள்

தில்லியில்விவசாயிகள்போராட்டம் நாற்பதாவது நாளை எட்டியுள்ளது. விவசாயிகளுக்கு ஆதரவாக சர்வதேச அரங்கில் முதல் குரல் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருமனிடமிருந்து வந்தது. இந்திய விவசாயிகளின் போராட்டம் சங்கடப்படுத்துவதாக ட்ரூமன் குறிப்பிட்டார். பேராளுமைமிக்க பாஜக அரசு சுண்டக்காய் கனடாவின் குறுக்கீட்டை விரும்புமா? உடனடியாக கனடா தூதரை அழைத்து தன் ஆட்சேபனையை தெரிவித்தது.

ஆனால் அதே நேரம் இங்கிலாந்திலிருந்து இன்னொரு செய்தி வந்தது. அங்கே டிராக்டர் ஊர்வலத்தை விவசாயிகள் நடத்துகிறார்களாம். பிரசித்திபெற்ற ஸ்காட்லாந்து யார்டு போலீஸ் ஊர்வலத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. இந்திய விவசாயிகளுக்கு ஆதரவாக அவர்கள் முழங்குகின்றனர் என்று லண்டன் செய்தி கூறியது. இங்கிலாந்தினுடைய 36 எம்பிகள் அவர்கள் நாட்டு வெளியுறவு செயலாளர் டொமினிக்ராக்கிற்கு உழவர்கள் கிளர்ச்சியை ஆதரித்து கடிதம் அனுப்புகின்றனர்.

ஆஸ்திரேலியாவின் மெல்பர்னில் தூதரகத்தி லிருந்து நாடாளுமன்ற கட்டிடம் வரை உழவர்கள் போராட்டத்தை ஆதரித்து கார்கள் அணிவகுப்பு நடந்தது. வெளிநாடுகளில் இந்திய விவசாயிகளுக்கு ஆதரவாக மனிதச் சங்கிலி போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

### புது இலக்கணம்

இங்கே பேச்சுவார்த்தைகளுக்கு புது இலக்கணத்தை விவசாயிகள் எழுதுகிறார்கள். தீர்ப்பை எழுதி விட்டு விசாரணையை நடத்தாதீர்கள்.மொட்டைத்தலைக்கு பூ அலங்காரம் ஏன்? என்றனர். முதலில் 3 சட்டங்களை திரும்பப் பெற வேண்டும் என்ற எங்களின்

கோரிக்கை அப்படியே இருக்கிறது. அதன் பிறகே மற்றவை குறித்து பேச முடியும் என்றனர். பேச்சுவார்த்தைக்கு வந்த விவசாயப் பிரதிநிதிகளுக்கு பரிமாற அரசு உணவு கொண்டு வந்தது. அதனை உண்ண விவசாயிகள் மறுத்துவிட்டனர். ரோட்டிலே உட்கார்ந்து எங்கள் சகோதரர்கள் சாப்பிடும் போது இந்த மாளிகைகளில் உணவை உண்ண மாட்டோம். உங்களுக்காகவும் உணவை உற்பத்தி செய்யும் நாங்கள் சொந்தமாக சாப்பிட்டுக் கொள்கிறோம் என்றனர். மத்திய அரசு பதறியது. அவர்கள் தரும் தேநீரையும் பச்சைத் தண்ணீரையும் கூட உழவர்கள் பருக மறுத்தனர்.எங்களுக்குஉணவுதந்துஉபசரிக்க வேண்டாம். முடிந்தால் பிரச்சனைக்கு தீர்வு காணுங்கள் என்றனர். அசாதாரணமான இந்தச் சூழலில் தில்லி அரண்மனையில் வசிக்கும் பிரதமருக்கு தூக்கம் வரலாமா? அவரோ தினமும் புத்தம்புது ஆடை அணிந்து உலாபோனார்.

விவசாயிகளுக்காக மருத்துவர்கள் இலவச மாக சேவை செய்கின்றனர். விவசாயிகள் அவர்களுக்கு கரும்புச்சாறு தருகின்றனர். அவர்கள் அங்கேயே சமைக்கிறார்கள், அங்கேயே சாப்பிடுகின்றனர், அங்கேயே உறங்குகின்றனர், அங்கேயே இயற்கைக் கடனை கழிக்கின்றனர். செய்தித்தாள் வாசிப்பது, வழிபாடுகள் நடத்துவது என நடுச்சாலையிலே விவசாயிகள் இயங்கு கின்றனர். ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக போராட்டங்களில் பங்கேற் கின்றனர். கைப்பந்து விளையாட்டு உள்ளிட்ட உடற்பயிற்சிகளை அங்கேயே செய்கின்றனர். உலகத்தின்எங்கேயும்நடக்காதபோராட்டமாக எந்த வன்முறையும் இன்றி போராட்டம் நடக்கிறது. போராட்டம் முன்னேறுகிறது உலகப்போராட்ட வரலாற்றில் சரித்திரம் படைக்கிறார்கள் இந்திய விவசாயிகள்.

**பிரதமரின் பொய்யுரைகள்**

புதிய வேளாண் சட்டங்கள் குறித்து எதிர்க் கட்சியினர் திரும்பத்திரும்ப பொய் கூறுவதாக வும், அவர்கள் தங்கள் சொந்த அரசியலுக்காக விவசாயிகளைப் பயன்படுத்திக் கொள்வ தாகவும் குற்றஞ்சாட்டுவதை பிரதமர்மோடி நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் தெரிவித்திருக்கிறார்கள். பிரதமரின் குற்றச்சாட்டுகள் உண்மைக்கு நேர் விரோதமானவைகளாகும் என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இவர் கூறுவதில் மாபெரும் பொய் என்பது எதிர்க்கட்சியினர் குறைந்தபட்ச ஆதார விலை குறித்து பொய் சொல்வதாகக் கூறுவதாகும். இதுதொடர்பாக சுவாமிநாதன் ஆணையத்தின் அறிக்கை அமல்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதாக, பிரதமர் கூறுகிறார். இந்த அறிக்கையில் குறைந்தபட்ச ஆதார விலை என்பது, விவசாய விளைபொருளின் உற்பத்திச் செலவினத்துடன்ஐம்பதுசதவீதம்கூடுதலாகச் சேர்த்து விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்பதாகும். உண்மையில் இந்த அரசாங்கம் இவ்வாறு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்ய முடியாது என்று உச்சநீதிமன்றத்தில் கூறியிருக்கிறது யார், உண்மையல்லாதவற்றைப் பரப்பிக் கொண்டி ருக்கிறார்கள்? உண்மை நிலவரம் என்ன வெனில், விவசாயிகள் கடன்வலைக்குள் சிக்கி வெளிவரமுடியாமல் திண்டாடுவது அதிகரித்துக்கொண்டிருக்கிறது என்பதும், அவர்களில் பலர் வேறு வழி தெரியாமல் தற்கொலைகள் செய்துகொள்வது அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பது மேயாகும். தில்லியில் நிலவும் கடும் குளிரையும் பொருட்படுத்தாது, அண்டை மாநிலங்களிலிருந்துதில்லியைநோக்கி வந்துகுவிந்துள்ள,மற்றும் நாடுமுழுவதுமிருந்து வந்துகொண்டிருக்கிற பல லட்சக்கணக்கான விவசாயிகளின் ஒற்றுமையும் உறுதியும் இந்த வேளாண் சட்டங்களுக்குஎதிராகஅதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே 33 விவசாயி கள் இப்போராட்டத்தில் தங்கள் உயிரை இழந்திருக்கின்றனர் என்பது வேதனைக்குரிய செய்தி.

போராட்ட களத்தில் எப்போது ஒரு கோடி பேருக்கும் மேல் விவசாயிகள் இருக்கிறார்கள். எதிர்கட்சிகளின் தூண்டுதல், பாகிஸ்தான் பயங்கர வாதிகள், என்று ஏதோதோ சொல்லிப்



பார்த்தும் விவசாயிகள் தங்கள் போராட்டத்தை கைவிட்டுவிடவில்லை மாறாக இந்தியாவுக்கு வெளியே இருந்தும் பல நாடுகளின் ஆதரவு இந்தப் போராட்டத்திற்கு குவிந்து வருகிறது. அத்தனைக்கு பிறகும் அமித்ஷா மோடி வகையறா உடனடியாக வேளாண் சட்டங்களை திரும்பப் பெற வேண்டும். இல்லையென்றால் கூண்டோடு ராஜினாமா செய்ய வேண்டும் என்ற குரல்கள் எழும்பி வருகின்றன.

**விவசாய சட்டங்களை விவசாயிகள் எதிர்ப்பது ஏன்?**

ஒப்பந்த சாகுபடி முறையால் அனைத்து உற்பத்திப் பொருட்களும் அதன் விலைத் தீர்மானமும் கார்ப்பரேட்டுகளின் கைகளுக்குப் போய்விடும். உணவு உத்தரவாதம் கேள்விக் குறியாகிவிடும்.

கூட்டுறவு விற்பனை அங்காடிகளுக்கு வெளியே ஒரு சந்தை என்பது, குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) அற்றுப் போகச் செய்யும். கார்ப்பரேட்டுகள் வைத்ததே விலை என்ற நிலை வரும். சிறு குறு விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்படுவர்.

அத்தியாவசியப் பொருட்கள் சட்டத் திருத்தம், பதுக்கல் மற்றும் விலைவாசி உயர்வுக்கே வழி வகுக்கும்.86சதவீத சிறு குறு விவசாயிகள் மிகக் கடுமையாக பாதிக்கப்படுவர்.


**நம்பிக்கையற்றுப் போன வார்த்தைகள்**

வேளாண்துறை சீர்திருத்தங்களின் பலன் களை வருங்காலங்களில்தான் பார்க்கவும் உணரவும்முடியும் என்று பிரதமரும் உள்துறை அமைச்சரும் சொல்வதை விவசாயிகள் நம்ப மறுக்கிறார்கள். ஏனென்றால்... அவர்கள் ஏற்கெனவே அறிவித்த பணமதிப்பிழப்பின் பலனைப் பார்த்தாச்சு... ஜிஎஸ்டியின் பலனைப் பார்த்தாச்சு...நதிநீர் இணைப்பின் பயனைப் பார்த்தாச்சு...நீட் தேர்வின் பலனைப் பார்த்தாச்சு... சுற்றுச் சூழல் மதிப்பீட்டின் பலனைப் பார்த்தாச்சு...பொருளாதாரம் மற்றும் வேலை வாய்ப்பின் பலன்களையும் பார்த் தாச்சு. அதனால்தான் நம்ப மறுக்கிறார்கள்.

புதிய வேளாண் சட்டங்களை திரும்பப் பெறக் கோரி தில்லியில் விவசாயிகள் நடத்தும் போராட்டத்திற்கு நாட்டின் எல்லை காக்கும் இராணுவத்தினர் முதல் காட்டில் அமைதி தேடும் புத்த பிட்சுகள் வரை அனைத்துத் தரப்பினரும் ஆதரவு கொடுத்த பின்னரும் வேளாண் சட்டங்களில் உள்ள நன்மைகள் விவசாயிகளுக்கு புரியவில்லை என்று பாஜக வினரும் அதன் அமைச்சர்களும் தேய்ந்துபோன ரிக்கார்டாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆமாமாம், நம்முடைய வணிகர்களுக்கு ஜிஎஸ்டி புரியாது, பொருளாதார அறிஞருக்கு டீமானிடேஷன் புரியாது, முஸ்லிம்களுக்கு சிஏஏ புரியாது, விவசாயிகளுக்கு வேளாண் திட்டங்கள் புரியாது. ஆனால் இதெல்லாம் பாஜக ஆதரவாளர்களுக்கு மட்டும் புரியும்.

**எது வளர்ச்சி ?**

வளர்ச்சி என்பது ரயிலில் டீ விற்பது மட்டு மல்ல, டீ விற்ற ரயிலையும் சேர்த்து விற்பது. நமது பிரதமர் ரயிலை மட்டுமா விற்க முனைந் திருக்கிறார்? நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க ஏர் இந்தியா மற்றும் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகியவற்றையும் வரும் மார்ச் மாதத்திற்குள் தனியாருக்கு விற்க முடிவு செய்திருக்கிறார். உண்மையில் மோடி டீ விற்றாரா இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால் நாட்டை விற்று வருகிறார் என்பது நிதர்சனமாகி வருகிறது.




**புதியவேளாண் சட்டங்களால் பொது விநியோகத் திட்டத்திற்கும் ஆபத்து**

இந்திய அரசுக்கு சொந்தமான உணவுதானிய கிடங்குகளில் சுமார் 8 கோடி டன் உபரியாக உள்ளது. ஆண்டுதோறும் பல

லட்சம் டன் உணவு தானியங்கள் வீணாக்கப்படுகிறது. கொரோனா காலத்தில்கூட வேலை இல்லாமல் வறுமையில் வீட்டில் முடங்கிக்கிடந்த மக்களுக்கு அவற்றை பகிர்ந்தளிக்க ஆட்சியாளர்கள் முன்வரவில்லை. எல்லோருக்குமான பொது விநியோகத் திட்டத்தை மத்திய அரசு முற்றிலுமாக ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. அசீம் பிரேம்ஜி யுனிவர்சிட்டி நடத்திய ஆய்வில், ஊரடங்கு காலத்தில் கடந்த 45 வருடங்களில் இல்லாத அளவுக்கு வேலையின்மை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கிறது. முறைசாரா மற்றும் இதரத் துறைகளில் பணியாற்றிய 71 சதமான பெண்களும், 63 சதமான ஆண்களும் வேலையை இழந்துள்ளதாக அந்த ஆய்வு தெரிவிக்கிறது. ஊரடங்கு காலத்தில் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சந்தித்த கொடுமைகள் மிகக்கொடூரமானவை. வேலை செய்த இடத்தைவிட்டு சொந்த ஊருக்கு பல லட்சம் தொழிலாளர்கள் சென்றுள்ளனர். ஆனால், அங்கும் அவர்கள் வேலையில்லாமல் தவித்து வருகின்றனர். புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் எங்கு இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் ரேசன் கடைகள் மூலமாக உணவு வழங்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களை நூறுநாள் வேலைத்திட்டத்தில் சேர்த்து வேலை வழங்க வேண்டும். நகர்புறப் பகுதிகளுக்கும் நூறுநாள்வேலையை விரிவுபடுத்த வேண்டும்.

ஊரடங்கு காலத்தில் 80 சதவிகிதம் குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளதாக தேசிய மகளிர் ஆணையம் தெரிவிக்கிறது. இதற்கு வேலையின்றி வீட்டில் முடங்கிக் கிடந்தது, வறுமை, பசி, பட்டினி உள்ளிட்டவைகளே காரணம். மத்திய அரசு கொண்டு வந்துள்ள வேளாண் சட்டங்களால் விவசாயிகள் மட்டும் பாதிக்கப்படப் போவதில்லைஞு நுகர்வோரும் கடுமையான பாதிப்புக்கு உள்ளாவார்கள். இந்தச் சட்டங்கள் ரேசன் முறையையும் அழிப்பதற்கு வழிவகுக்கிறது. கடந்த 15 நாளில் சிலிண்டர் விலை ரூ.100 அதிகரித்துள்ளது. மோடி அரசு ஆட்சிக்கு வந்தபோது 414 ரூபாயாக இருந்த சிலிண்டர் விலை தற்பொழுது குடும்பத்திற்கு 710 ரூபாயாகவும் மற்றவர்களுக்கு 810 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது. பெட்ரோல் விலை நூறு ரூபாயை எட்டவுள்ளது. இப்படி செங்குத்தான விலை உயர்வுக்கு காரணமான ஆட்சியாளர்களுக்கு மக்கள் சரியான பாடம் புகட்ட காத்திருக்கின்றனர்.

### பிரதமரின் பிடிவாதம்

வேளாண் சட்டங்கள் பற்றி மத்தியப் பிரதேச நிகழ்ச்சியின் காணொலிக் காட்சி ஒன்றில் வேண்டுகோள் விடுக்கும் பிரதமர், போராடும் விவசாய சங்கப் பிரதிநிதிகளுடன் ஏன் பேச மறுக்கிறார்? இவரும் டில்லியில்தான் இருக்கிறார்.. விவசாய சங்கப் பிரதிநிதிகளும் டில்லியில்தான் இருக்கின்றனர். வேறு எங்கெல்லாமோ போய் முழங்கும் மோடி நேரடியாக சம்பந்தப்பட்டவர்களுடன் பேச மறுப்பது ஏன்?




### திருடன் கையிலேயே சாவியா?

பொதுமக்களின் சேமிப்பை காக்க பல்வேறு சட்ட திட்டங்களை வகுக்கும் ரிசர்வ் வங்கியையும் மீறி பல தவறுகள் நிகழ்ந்து விடுகின்றன. ஆனாலும் சில பல சமயங்களில் ரிசர்வ் வங்கி அளிக்கும் பரிந்துரைகள் வங்கி மீதான நம்பகத்தன்மையை சிதைத்துவிடக் கூடியதாகத்தான் இருக்கிறது.



பெரிய நிறுவனங்கள் தங்களது நிதித் தேவையை பூர்த்தி செய்துகொள்ள வங்கிகள் தொடங்க அனுமதிக்கலாம் என்ற பரிந்துரையும் இதில் ஒன்றாகும். நெட்பிளிக்ஸ் நிறுவனம் பேட் பாய் பில்லியனர்கள் (Bad Boy Billionaires) என்ற பெயரில் ஒரு ஆவணப் படத்தைத் தயாரித்துள்ளது.

விஜய் மல்லையா, நீரவ் மோடி, சுப்ரதா ராய், ராமலிங்க ராஜு ஆகியோர் அரசியல் செல்வாக்குடன் வங்கிகளை எந்த அளவுக்கு சூறையாடினர் என்பதை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதுதான் இந்த ஆவணப் படம். வங்கிகள் இம்மூவர் வசம் இல்லாத போதே இவர்கள் வங்கிகளின் நிதி வளத்தை சூறையாடியுள்ளனர். இவர்கள் வசம் வங்கிகள் இருந்தால் அதில் முதலீடு செய்தவர்களின் கதி என்னவாகும்? ரிசர்வ் வங்கி குழுவின் பரிந்துரைக்கு பதிலாக அமைந்துள்ளது நெட்பிளிக்ஸின் ஆவணப்படம்.

தவறுகள் நிகழ்ந்த பிறகு அதை திருத்த புதிய சட்டங்கள் போடுவதையே ரிசர்வ் வங்கி வழக்கமாகக் கொண்டிருக்கிறது. எதற்கெடுத்தாலும் மேலை நாட்டினரை உதாரணமாகக் கொண்டு பார்க்கும் அரசு, அமெரிக்கா போன்ற நாடுகளில் தொழில்துறையினர் வங்கி தொடங்க அனுமதிக்கப்படுவதில்லை என்பதை ஏன் உணரவில்லை என்பது கேள்விக்குறி.

இந்தியா போன்ற நாட்டில் நிறுவனங்களின் நிதித் தேவைக்கு வங்கி தொடங்க அனுமதி தந்தால், பல்லாயிரக் கணக்கானோரின் சேமிப்புகள் வாராக் கடனாவதும் அதற்கு தீர்வாக அரசு நிதி அளிக்க வேண்டிய நிர்பந்தத்துக்குத் தள்ளப்படுவதும் தொடர்கதையாக ஆகிவிடும்.

### "சீர்திருத்தம்" எனும் நாசகர சொல்

மிக அதிகமான ஜனநாயகம் இருப்பதால் இந்தியாவில் சீர்திருத்தங்கள் கடினமாக இருப்பதாக சொல்லியிருக்கிறார் நிதி ஆயோக் தலைவர் அமிதாப் கந்த் வரவர ராவ், உமர் காலித், சுதா பரத்வாஜ், இன்னும் உரிமைகளுக்காக குரல் கொடுத்த ஒற்றைக் காரணத்துக்காக சிறையில் வாடிக்கொண்டிருக்கும் மக்கள் போராளிகளிடம் கேட்போம், அதிக ஜனநாயகம் பற்றி. பீமா கோரேகான் வழக்கில் கைது செய்யப்பட்ட 83 வயது ஸ்டான் சுவாமி வயது மூப்பு காரணமாக பயன்படுத்தக் கோரிய உறிஞ்சும் (sipper) கிளாஸ் மறுக்கப்பட்டதிலும், அதேபோல கைது செய்யப்பட்டு கண் கண்ணாடி மறுக்கப்பட்ட கௌதம் நவ்லகாவின் கோரிக்கைகளிலும் பல்லிளித்துக் கொண்டிருக்கிறது "மிக அதிகமான ஜனநாயகம்." அவ்வளவு ஏன்? தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக வன்முறையில் அதைத் தூண்டியவர்களைப் பாதுகாத்து, பாதுகாத்தவர்களைப் பழி வாங்கிய மாண்புதானே மத்திய அரசின் அதிகப்படியான ஜனநாயக மாண்பு. மூன்று வேளாண் மசோதாக்களின் மீது ஓட்டெடுப்பு நடத்தாமல் நடத்தியதா கூறி, நடத்தக் கூறியவர்களை மாநிலங்களவையில் இருந்து சஸ்பெண்ட் செய்ததுதானே மோடி அரசின் ஜனநாயகம்? பிரிட்டிஷாரின் பேயாட்சியில் கூட இத்தனை லட்சம் மனிதர்கள் டிசம்பர் மாத தில்லி குளிரில் இருப்பிடமல்லா இடத்தில் உறைந்து கிடந்தது கிடையாது. ஜனநாயகத்தின் பேருருவை அவர்கள் உலகுக்கு காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மோடி அரசோ நெடுஞ்சாலைகளின் குறுக்கே முள்வேலிகளால் சுவரெழுப்பிக் கொண்டிருக்கிறது. தன் உரிமைக்காகப் போராடும் கடைசி மனிதரும் மாண்பிழந்து சிறையில் அடைக்கப்படும் வரை ஒரு துளி ஜனநாயகம் கூட இத்தகைய அரசுக்கு அதிகப்படியான ஜனநாயகமாகத்தான் இருக்கும். ஜனநாயகத்தின் முனையை உடைத்து எளிய மக்களின் ரத்தத்தில் நீங்கள் எழுதிக்கொண்டிருப்பதுதான் இந்த சீர்த்திருத்தங்கள் என்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன்.


நாடாளுமன்றக் கட்டிட அடிக்கல் நாட்டு விழாவில் ஜனநாயகம் இல்லை.

மோடி அரசாங்கம் ஜனநாயகத்தை அழித்துக் கொண்டிருக்கிறது. புதிய நாடாளுமன்றக் கட்டிட அடிக்கல் நாட்டு

விழாவில் அவர் ஆற்றியஉரை, மிகவும் மோசமான இரண்டாந்தரமாகும். மோடி, ஜனநாயகத்தின் விழுமியங்கள் குறித்தும் கலாச்சாரம் குறித்தும் அறநெறிப் பிரச்சாரம் மேற்கொண்டுள்ள அதே சமயத்தில், நடைமுறையில் அவர் ஜனநாயகத்தை அழித்துக்கொண்டிருக்கிறார். நம் ஜனநாயகத்தின் ஒவ்வொரு நிறுவனமும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. மோடியின் அரசாங்கம் நாட்டின் குடிமை உரிமைகள் மீது மிகவும் நாணமற்ற முறையில் தாக்குதலைத் தொடுத்திருக்கிறது. அரசாங்கத்திற்கு எதிராகக் கருத்துக் கூறுபவர் எவராக இருந்தாலும் அவர் தேச விரோதி என முத்திரை குத்தப்படுகிறார். இந்த நாட்டில் அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் ஓர் ஆணும், பெண்ணும் சுதந்திரமாக திருமணம்கூட செய்துகொள்ள முடியாது. டிசம்பர் 10 அன்று நடைபெற்ற நாடாளுமன்ற அடிக்கல் நாட்டு விழாவில் பெரிய கட்சிகள் அனைத்தும் கலந்து கொள்ளாதது இந்நிகழ்ச்சியில் ஜனநாயகம் இல்லை என்பதைத் தெளிவாகக்காட்டுகிறது.

**விவசாயிகள் மட்டுமின்றி, உணவு உண்போர் அனைவரும் மத்திய அரசிடம் கேட்க வேண்டிய கேள்விகள்:**

எதற்காக அதானி குழுமம் 9.5 லட்சம் டன் உணவு தானிய சேமிப்பு கிடங்குகளை தயாராக வைத்துள்ளது? இப்படி ஒரு சட்டம் இயற்ற வேண்டும் என்பது மோடிக்கு அவர்களது அறிவுரையா?




அத்தியாவசிய உணவுப்பொருள்கள் பட்டியலை மாற்றியது ஏன்? கார்ப்பரேட் நிறுவனங்களுடன் ஒரு சிறு விவசாயி எப்படி ஒப்பந்தம் போட முடியும்? அவன் சொன்ன இடத்தில்தானே கையெழுத்துப் போடவேண்டும்?

**மாநில அரசுகள் இதில் தலையிட முடியாது என்றால் யாருக்கு லாபம்?**

விற்பனைத் தொகையை தவணை முறையில் தந்தால் எந்த விவசாயியால் பிழைக்க முடியும்?

**பொது விநியோகத் திட்டம் என்னாவது?**

Food Corporation of India வின் நிலை என்ன? அவர்கள் நாடெங்கிலும் ஏற்படுத்தி உள்ள வசதிகள் யார் கையில் ஒப்படைக்கப்படும்?

கார்ப்பரேட் நிறுவனங்களால் மாநில இளநிலை அதிகாரிகளை கைக்குள் போட்டுக்கொள்வது அவ்வளவு கடினமா?

மேலும் பல கேள்விகள் எழுகின்றன. சிலர் ஆதாயத்திற்காகவோ அல்லது ஒரு சார்பு நிலை எடுத்துவிட்டதாலோ உழவர்களை கிண்டலடிக்கலாம். ஒரு அரசு கடும் குளிரில் அமர்ந்து போராடும் லட்சக்கணக்கணக்கான உழவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி மீண்டும் ஐந்து நாட்கள் குளிரில் அவதிப்படுங்கள், நாங்கள் எங்களுக்குள் வசதியாக அமர்ந்து பேசி மீண்டும் உங்களுடன் பேசுவோம் என்பது எந்த விதத்தில் நியாயம்?

இந்த வலிகள் ஏதோ ஒரு சந்தர்ப்பவசமாக பல மாநிலங்களில் ஆட்சியில் அமர்பவர் களுக்குப் புரியாது. புரிந்து கொள்ளவும் விரும்ப மாட்டார்கள். ஆனால், உழவுக் குடும்பத்தில் பிறந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் இதன் பெரும் கேடு தெளிவாகப் புரியும். உழவுக்கு தலை வணங்குவோம்.. உழவரைப் போற்றுவோம். உழவர்களின் நியாயமான போராட்டம் வெல்ல துணை நிற்போம்!



**டிசம்பர் 20,2020 அன்று தருமபுரியில் நடைபெற்ற**
**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவையில்**
**நிறைவேற்றப்பட்ட அறைகூவல் தீர்மானம்!**
**இனி நாம் நிகழ்த்திக் காட்ட வெண்டியது பொராட்டங்களல்ல, அதற்கும் மேலே!**

# 2021 பிப்ரவரி 2 முதல் மாவட்டத் தலைநகரங்களில் தொடர் மறியலும் சிறை நிரப்பும் போராட்டமும்

**தலைமுறையைத் தாண்டிய பொறுமைகள்!**

அரசு ஊழியர்களுக்கு தமிழக அரசு கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படாததின் ஒரு தலைமுறைக் காலம் அதாவது 10 ஆண்டுகள் நிறைவடையப் போகிறது. மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலின்போது ”அதிமுக அரசு அமைத்தால் புதிய ஓய்வூதிய திட்டம் ரத்து செய்யப்படும்” என தேர்தல் வாக்குறுதி அளித்திருந்ததை அவருடைய ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் இப்போதைய அ.தி.மு.க. கட்சியினருக்கு நினைவு படுத்தவேண்டிய நிலைக்கு அரசு ஊழியர்கள் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். ஜெயலலிதா அம்மையார் 2011ல் கொடுத்த வாக்குறுதி 2015 வரை நிறைவேற்றப்படாத நிலையில் தமிழ்நாடு அரசுஊழியர் சங்கம் உள்ளிட்ட அனைத்து சங்கங்களும் போராட்டம் நடத்தினோம். அதன் பலனாக ஆட்சியின் ஐந்தாண்டுகள் முடியும் தறுவாயில் 19.02.2016ஆம் தேதி ஜெயலலிதா அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதி திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை அளிக்க திருமதி சாந்தா ஷீலா நாயர் ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமைத்து, அது மூன்று மாத காலத்திற்குள் அறிக்கை அளிக்கும் படியும், வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தக்க முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். இந்த வல்லுநர் குழுவின் காலவரை நான்குமுறை நீட்டிப்பு செய்யப்பட்டு அதன்பிறகு அது என்னவாயிற்று என்று தெரியாமலேயே கைவிடப்பட்ட நிலையில், அதுகுறித்து கேட்டு அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தீவிரப் போராட்டத்தில் இறங்கிய பின்னர், ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ். தலைமையில் செப்டம்பர் 2017ல் புதிதாக ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. அந்த வல்லுநர் குழு 2017 நவம்பர் 30க்குள் அது அறிக்கை அளிக்கும் என்றும் அதன்பேரில் பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவித்த தமிழக அரசு 2017, நவம்பர் 30ம் தேதி வல்லுநர் குழுவின் அறிக்கையை பெறவும் இல்லை, அது குறித்து எந்த அறிவிப்பையும் வெளியிடவுமியில்லை. ஜாக்டோ-ஜியோ அமைப்பினர் போராட்டம் நடத்த தடை விதிக்கப்பட்ட வழக்கு மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் விசாரணைக்கு வந்தபோது 2017, நவம்பர் 30ம் தேதிக்குள் பங்களிப்பு ஓய்வூதியம் திரும்பப் பெறுவது குறித்த வல்லுநர் குழு அறிக்கை நிச்சயமாக பெற்று அதன்பேரில் முடிவெடுக்கப்படும் என்று உறுதியளித்த அரசு, வல்லுநர் குழுவின் அறிக்கையை பெற்றுக்கொண்டு அதை இதுவரை வெளியிடாமல் கிடப்பில் போட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாகவே நாம் தமிழக அரசாங்கத்துடன் ஊதிய மாற்றம் தொடர்பான முரண்பாடுகள் சரி செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளுக்காக தொடர் போராட்டம் நடத்தி வருகிறோம். 2008ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மத்திய அரசு ஊழியர்களுக்கான ஊதிய மாற்றம் அறிவிக்கப்பட்டது. ஆனால் தமிழக அரசு ஊழியர்களுக்கு ஊதிய மாற்றக் குழு அமைக்காததால் சென்னை கோட்டை நோக்கி பேரணி நடத்தியதன்பேரில் அரசு அலுவலர் குழுவை அமைத்தது. அந்த அலுவலர் குழு அனைத்து சங்கங்களின் கருத்துக்களையும் கேட்டபின்னர் தன்னுடைய பரிந்துரையை 2009 ஜுன் மாதம் வெளியிட்டது. ஆனால் வாக்குறுதி கொடுத்தது போல் அல்லாமல் மிக மோசமான ஊதிய மாற்ற முரண்களுக்கு பஞ்சமில்லாத ஊதிய மாற்ற பரிந்துரைகளை அரசு ஏற்படுத்தியது. பரிந்துரைகளை மறுபரிசீலனை செய்ய சங்கங்கள் எழுப்பிய கோரிக்கைகள் மௌனங்களால் நிராகரிக்கப்பட்டன. 9 மாதங்கள் கழித்து முரண்பாடுகளுடன் அரசாணைகள் வெளிவந்தன. இந்த ஊதிய முரண்களை சரிசெய்ய நமது சங்கம் உடனடியாக சங்கத்தலைவர்களை அழைத்துப் பேசி குறைகளை களைய அரசிடம் கோரிக்கை வைத்தது. ஆனால் அரசோ அதை செய்யாமல்

9.9.2009ல் ஒரு நபர் குழு அமைத்தது. அது 7 மாத காலம் எடுத்துக் கொண்டு 24.4.2010ஆம் தேதி தனது அறிக்கையை அளித்து. அந்த அறிக்கையை ஒரு நபர் குழுவும் மீண்டும் சங்கங்கள் வைக்கும் ஊதிய முரண்பாடுகளை அக்கறையுடன் கேட்பதாக பாசாங்கு செய்து அரசுக்கு பரிந்துரை அளிக்க 7 மாத கால அவகாசம் எடுத்துக் கொண்டது. 24.4.2010ஆம் தேதி ஒரு நபர் குழு அளித்தது அறிக்கையை பரிசீலனை செய்வதாக மேலும் 4 மாதங்கள் காலவிரயம் செய்தது. 26.8.2010ம் தேதி ஒருநபர் குழுவின் பரிந்துரைகளை அப்படியே ஏற்பதாக கூறி மேலும் குளறுபடியான 89 அரசாணைகளை வெளியிட்டது அரசு.

ஒருநபர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வெளியிடப்பட்ட அரசாணைகளால் ஏற்பட்டிருந்த குளறுபடிகளையும், பெரும்பான்மை ஊழியர்களுக்கு ஏற்பட்ட அநீதிகளையும் கண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வெகுண்டெழுந்து பதிய தலைமை செயலகத்தை நோக்கி பேரணியாய் அரசு ஊழியர்கள் 25.02.2011ஆம் தேதி சென்றபின் அடுத்த நாளே அரசாணைகள் முரண்பாடுகளுடன் வெளியிடப்பட்டன. அரசாணைகளில் முரண்பாடுகள் இருப்பதை அரசு ஒப்புக்கொண்டு ஊதியகுறை தீர்க்கும் குழு அமைத்தது. அந்தக் குழுவும் அனைத்து சங்கங்களையும் கூப்பிட்டு கருத்து கேட்டது.

இப்படி அலுவலர் குழு, ஒரு நபர் குழு, குறை தீர்க்கும் குழு என்று குழுக்களுக்கு மேல் குழுக்கள் அமைத்து அரசு ஊழியர்களுக்கு நியாயமான ஊதியமாற்றம் ஏற்படுத்தாமல் தடுத்த ஆட்சியின் காலம் 2011ல் முடிவுறும் தறுவாயில் அந்த அரசால் அமைக்கப்பட்ட குறைதீர்க்கும் குழு செயலிழந்து முடக்கப்பட்டது. அதனால் ஊதிய முரண்பாடுகளை களைய, ஜெயலலிதாவின் புதிய அரசிடம் போராட்டம் நடத்தி புதிய குறை தீர்க்கும் குழு அமைத்திட வேண்டியிருந்தது. அந்தக் குழுவும் அனைத்து சங்கங்களையும் விசாரித்து 2013ல் அரசாணைகளை வெளியிட்டது. இந்த அரசாணைகளிலும் பொதுப்பிரிவினரின் குறைகளுக்கும் அடிப்படை ஊழியர்களின் குறைகளுக்கும் சரியான தீர்வு காணாமல் விடப்பட்டதால் குறைகளும் முரண்களும் களையப்படாத நிலையே தொடர்ந்தது. ஆக மக்கள் நலனுக்கான இயந்திரத்தை சிறப்பாக நடத்திக் கொடுக்கும் அரசு ஊழியர்களின் ஊதிய மாற்றம் குறித்த அறிவிப்புகளை திறந்த மனதுடன் பேசித் தீர்க்காமல் பாசாங்கு செய்து வரும் இந்த அரசாங்கத்தின் 'ஏமாற்று வேலை'க்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டிய இடத்தில் அரசு ஊழியர்களாகிய நாம் உள்ளோம்.

**மத்திய அரசு ஊதியத்திற்கு இணையான ஊதியம் ஒரு கானல் நதி!**

மத்திய அரசுக்கு இணையான ஊதியம் தமிழக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக ஒரு பிம்பம் உருவாக்கப்பட்டு அது பொதுவெளியில் தொடர்ந்து பிரதிபலிக்கப்பட்டு வருகிறது. 1.6.1988ல் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் என்று அறிவிப்பு வந்தபோது தமிழ்நாடு அரசு ஊழியர்கள் அனைவரும் அகமகிழ்ந்தனர். ஆனால் அது வெறும் ஊதிய விகித கணக்கோடு நின்று போனது. மத்திய அரசு ஊழியர்கள் பெறும் வீட்டு வாடகைப்படி, கல்விப்படி, போக்குவரத்துப்படி போன்ற பல படிகள் (Allowances) தமிழக ஊழியர்களுக்கு இன்றுவரை வழங்கப்படாத நிலையில் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் என்பது வடிகட்டிய பொய்யுரையாகும். 1988ல் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் என்று தமிழக அரசு சொன்ன வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையில்தான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பத்தாண்டுகளுக்கு ஒருமுறையான ஊதிய மாற்றத்திற்கு ஒப்புக் கொண்டது. ஆனால் வீட்டுவாடகைப் படியிலிருந்து கல்விப்படி வரை மத்திய அரசு ஊழியர்கள் துய்த்துவரும் மாணவர்களுக்கான கல்விப்படி, சீருடைப்படி, சலவைப்படி, அகவிலைப் படியுடன் கூடிய போக்குவரத்துப் படி, மலைவாழ்படி, குளிர்காலப்படி, ஆபத்துப்படி, திட்டப்படி, பயணப்படி, மாறுதல்படி போன்ற பலவிதமான படிகள் தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு மறுக்கப்பட்டுள்ள நிலையில் இந்த ஊதிய மாற்றத்தின் போதாவது அவை வழங்கப்பட வேண்டும் என்று அரசு ஊழியர்கள் எதிர்பார்த்தது பொய்யாகிப்போனது. கடந்த இருபது ஆண்டுகளாக தமிழக அரசு ஊழியர்கள் மத்திய அரசுக்கு இணையான வீட்டுவாடகை படி உள்ளிட்ட அனைத்துப் படிகளின் மூலம் இழந்திருக்கும் ஏகப்பட்ட நிதிவருவாய் இனிமேலும் தொடரக்கூடாது. மாற்றம் ஏற்பட வேண்டியது அவசியமாகும். அதை ஏற்படுத்திட வேண்டி நாம் ஒன்றுகூட வேண்டியது மிக மிக அவசியம் ஆகும்.

**சாலைப் பணியாளர்கள் கேட்பது உரிமையல்ல வாழ்வாதாரம்!**

சாலைப்பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட காலம் முதல் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்ட காலம் வரையிலான இடைப்பட்ட 41 மாத



காலத்தை பணிவரன்முறை செய்யவும் பணி வழங்கப்படாமல் இருந்த 41 மாத காலத்தை பணிக்காலமாக கருதி அவர்களுக்கு 41 மாத ஊதியம் வழங்க வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தொடர்ந்து வலியுறுத்தி கோரிக்கை மனுக்கள் கொடுத்து வருகிறது. பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த சாலைப்பணியாளர்கள் வேறு வேலைக்கு செல்லமுடியாமல் 41 மாதகாலமும் ஊதியமின்றி தங்கள் குடும்ப வாழ்வை, கடன்பெற்று வாழ நேர்ந்துள்ளதையும், கடன்தொல்லையில் உழன்று வரும் அவர்கள் நிம்மதியாக வாழவும், குடும்ப நலன் பேணவும் அரசுப்பணியை தொடர்ந்து அர்ப்பணிப்பு உணர்வுடன் ஆற்றவும், அவர்கள் பணி நீக்கத்திலிருந்த காலமான 41 மாதங்களுக்கு ஊதியம் வழங்கிட ஆவன செய்து, அவர்கள் பொருளாதார சிக்கலிலிருந்து மீண்டு சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழ உரிய உத்தரவுகள் பிறப்பிக்க, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்து வந்தது. இது குறித்தும் தமிழக அரசு இதுவரை எந்த அறிவிப்பும் வெளியிடாமல் மீளாத் துயிலில் இருப்பது அதன் ஊழியர் விரோத மனப்போக்கையே காட்டுகிறது. வலிமையான போராட்டங்கள் மூலம் மட்டுமல்லாமல் அதையும் தாண்டி சாலைப்பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்திற்கான ஊதியத்தை பெற்றுதர போராடவேண்டியது நமது சமூகக் கடமையாகும். அதற்காகவும் நாம் ஒன்றுகூடிட வேண்டிய அத்தியாவசியம் எழுந்துள்ளது.

**காலவரைகள் பல தாண்டியும் கிட்டாத காலமுறை ஊதியம்!**

கொத்தடிமை கூலிமுறையின் கீழ் சத்துணவு மைய அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள்,அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், சமூகவனப் பாதுகாவலர்கள், போன்றவர்கள் எவ்வித பதவி உயர்வும், பணி நன்மைகளும் இல்லாமல் உழன்று வருகின்றனர். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் சென்ற சட்டமன்றத் தேர்தலின்போது தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்புகாலமுறை ஊதியம் போன்ற கூலிமுறைகள் ஒழிக்கப்பட்டு முறையான காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்ற முக்கியமானதொரு வாக்குறுதியை தெரிவித்தார். ஆனால் அது குறித்தும் இதுநாள் வரையில் எவ்வித அறிவிப்புகளும் வெளியாகவில்லை. தமிழக அரசின் இத்தகைய வஞ்சிக்கும் போக்கு அரசு ஊழியர்களை ரௌத்திரம் கொள்ள வைத்துள்ளது. இவர்கள் பெறும் ஊதியம் சொற்பமானதே என்பதால் அரசாங்கம் அதை பெரிய மனதுடன் இந்தக் கூலிமுறையை ஒழித்து முறையான காலமுறை ஊதியத்தை வழங்கியிருக்க வேண்டும். அந்த நடைமுறை நடைபெற நாம் அனைவரும் கரம் கோர்க்க வேண்டியுள்ளது.

**இன்றைய நடப்புகளும், நேற்றைய படப்பிடிப்புகளும்!**

2011ம் ஆண்டில் போடப்பட்ட ஒரு நபர் குழு மற்றும் 2013ல் போடப்பட்ட குறை தீர்க்கும் குழு ஆகியவற்றில் பேரில் எந்த பயனும் விளையாத நிலையில் உச்சநீதிமன்றம் வழங்கிய உத்தரவின் அடிப்படையில் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி டி. முருகேசன் தலைமையில் குழு அமைக்கப்பட்டும் அதன்பேரில் வெளியிடப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் பத்தாண்டுகள் கழித்து அரசு ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் சம்பந்தமான அரசாணைகள் தற்போது வெளியிடப்படுகின்றன. ஆனால் தமிழக அரசு உயர்நீதிமன்ற மதுரைகிளையில் தற்போதைய ஊதிய மாற்றம் தொடர்பாக பரிசீலித்து அறிக்கை அளிக்க ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ். தலைமையில் செப்டம்பர் 2017ல் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு அது 2017 நவம்பர் 30ஆம் தேதி அறிக்கை அளிக்கும் என்று தெரிவித்தது. ஆனால் அந்த அறிக்கை கடந்த மூன்று ஆண்டுகளாக வெளிவராத நிலையில் இன்னொரு ஒருநபர் குழுவான ஆதிசேஷய்யா ஐ.ஏ.எஸ். கமிட்டி மட்டும் வெளிமுகமை, ஒப்பந்த ஊதியத்திற்கு ஆளெடுத்தல், அரசாங்கத்தில் உள்ள தேவையற்ற பணியிடங்களை கண்டறிந்து அவற்றை நீக்குதல், துறைகளை சுருக்குதல், இணைத்தல், முடக்குதல் மற்றும் இல்லாமல் செய்தல் போன்ற வேலைகளில் மிகவும் முனைப்பாக இறங்கி செயல்பட்டு வருகிறது.

கடந்த 2019ல் நடைபெற்ற காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற நமது அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் 5068 பேரின் மீதான 17(ஏ), 17(பி) போன்ற துறைவாரி நடவடிக்கைகளை திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கைகளையோ குறைந்தபட்சம் ஒழுங்கு நடவடிக்கைகளையோக்கூட

திரும்பப்பெறாமல் தமிழக அரசு இரும்புக் கரத்தை காட்டி வருகிறது .

**நீதி மன்றங்கள் யார் பக்கம் !**

அதேபோல் புதிய ஓய்வூதியத்தை திரும்பப் பெறுவதற்காக நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட அறிக்கை என்னவாயிற்று என்பது பற்றி இதுவரை அரசு ஊழியர்களுக்கு அரசும் சரி, நீதிமன்றமும் சரி, எதுவும் தெரிவிக்கவில்லை. நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அது பெறப்பட்டதாகவும் நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்ட நிலையில் அதன் மீதான அடுத்த கட்ட நடவடிக்கைகளை அரசாங்கமோ நீதிமன்றமோ மேற்கொள்ளாத நிலையில் சாதாரண அரசு ஊழியன் போராட தெருவீதியில் இறங்குவதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது?

ஆனால் போராட இறங்கினால் மட்டும் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள், அரசாங்க வேலைகள் பாதிக்கப்படும், அரசின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்றெல்லாம் அடுக்கடுக்கான கேள்விக்கணைகளை தொடுக்கும் நீதிமன்றங்கள், ஊழியர்களின் உரிமை சார்ந்த விஷயங்களில் அரசாங்கத்தின் கடமைகளை எடுத்துரைத்து நியாயமானதென்று கருதுகின்றவைகளை பெற்றுத்தந்தாலாவது அரசு ஊழியர்களின் போராட்ட குணம் மாறக்கூடும். ஆனால் நீதிமன்றங்கள் அரசாங்கத்தின் பக்கம் நின்று பேசுவதுதான் போராட்டங்களை மேலும் மேலும் பீறிட்டு அதிகரிக்க வைக்கின்றன.

**20 ரூபாய் ஸ்டாம்ப் பேப்பரில் ஒரு இறுதிச் சடங்கு!**

புதிய ஓய்வூதியத் திட்டம் கொண்டுவரப்பட்டபோதே அதை அரசு ஊழியர்கள் எதிர்த்தனர். அரசாங்கம் அதற்கு ஆயிரம் சமாதானங்களைக் கூறியது. ஆனால் இப்போது நடப்பது என்ன? பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அதாவது Contributory Pension Scheme இப்போது contributory Settlement Scheme ஆக மாறியுள்ளது. இனிமேல் பென்ஷன் கேட்கமாட்டேன் என்று 20 ரூபாய் பத்திரத்தாளில் எழுதிக் கொடுத்து தான் கட்டிய பணம் அரசாங்கத்தின் பங்களிப்பு இவற்றுடன் வட்டியையும் சேர்த்து (one time settlement) ஒரேமுறை செட்டில்மெண்டாக மாறியிருக்கும் அவலத்தை எதிர்த்துக் கேட்காமல் மனசாட்சி உள்ள எந்த அரசு ஊழியனும் கைகட்டிக்கொண்டு வேடிக்கை பார்க்க முடியாது. அதனால் தான் வீதிக்கு வரவேண்டியிருக்கிறது.

**அரசாங்கம் போட்டால் திட்டம், அரசு ஊழியன் கேட்டால் கொலைக் குற்றம்!**

2011ம் ஆண்டில் போடப்பட்ட ஒரு நபர் குழு மற்றும் 2013ல் போடப்பட்ட குறை தீர்க்கும் குழு ஆகியவற்றின் பேரில் எந்த பயனும் விளையாத நிலையில் உச்சநீதிமன்றம் வழங்கிய உத்தரவின் அடிப்படையில் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி டி. முருகேசன் தலைமையில் குழு அமைக்கப்பட்டும் அதன்பேரில் வெளியிடப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் பத்தாண்டுகள் கழித்து அரசு ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் சம்பந்தமான அரசாணைகள் வெளியிடப்படுகின்றன. ஆனால் தமிழக அரசு உயர்நீதிமன்ற மதுரைகிளையில் தற்போதைய ஊதிய மாற்றம் தொடர்பாக பரிசீலித்து அறிக்கை அளிக்க ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ். தலைமையில் செப்டம்பர் 2017ல் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு அது 2017 நவம்பர் 30ஆம் தேதி அறிக்கை அளிக்கும் என்று தெரிவித்தது. ஆனால் அந்த அறிக்கை கடந்த மூன்று ஆண்டுகளாக வெளிவராத நிலையில் இன்னொரு ஒருநபர் குழுவான ஆதிசேஷய்யா ஐ.ஏ.எஸ். கமிட்டி மட்டும் வெளிமுகமை, ஒப்பந்த ஊதியத்திற்கு ஆளெடுத்தல், அரசாங்கத்தில் உள்ள தேவையற்ற பணியிடங்களை கண்டறிந்து அவற்றை நீக்குதல், துறைகளை சுருக்குதல், இணைத்தல், முடக்குதல் மற்றும் இல்லாமல் செய்தல் போன்ற வேலைகளில் மிகவும் முனைப்பாக இறங்கி செயல்பட்டு வருகிறது.

**நிழல் ராஜாக்களின் நயவஞ்சகம்!**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பல கடுமையான போராட்டங்களை வலிமையாக நடத்தி, முழுமையான வெற்றி கண்டுள்ளது. தற்போது நம்முன் எதிர் நிற்கும் உரிமைப் பிரச்சனைகள் ஏதோ சில ஆயிரம் பேர் போராட்டம் நடத்தி மற்றவர்கள் அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாலே கிடைத்துவிடும் என்ற நிலையில் இல்லை என்கிற யதார்த்தத்தை ஒவ்வொரு ஊழியரும் உணர வேண்டும். நூறு சதவீத அர்ப்பணிப்பு உணர்வுடன் நாம் நடத்தும் ஒவ்வொரு இயக்கமும் நாம் கேட்கும் உரிமைகளை வென்றெடுக்க வல்லது என்பதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது.



இங்கே நடப்பது அரசாங்கம். இதை நடத்துவது ராஜாக்களோ அல்ல. அரசாங்கத்தின் நயவஞ்சகம். அதிகார வர்க்கம் ஊழைக்கும் வர்க்கத்தின் முதுகெலும்பை ஊனப்படுத்த நடத்தும் அராஜகம். இப்போது நாம் நிகழ்த்திக் காட்ட வேண்டியது ஒன்றே ஒன்றுதான், அதிகாரவர்க்கத்தின் வஞ்சனைகளை வெஞ்சினம் கொண்டு வீழ்த்த வேண்டும், அதன் துரோகங்களை தகர்த்தெறிய வேண்டும். அரசு ஊழியர்கள் நினைத்தால் அரசு மற்றும் அதிகாரவர்கத்தின் மூர்க்கத்தனமான செயல்களை குழிதோண்டி புதைக்கலாம் என்பதை, அதிகாரவர்க்கத்திற்கு மட்டுமல்ல, ஆட்சியாளர்களுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, இந்த அகிலத்திற்கே புரியவைக்க வேண்டியுள்ளது.

**இனி நாம் நிகழ்த்த வேண்டியது போராட்டங்களல்ல, அதற்கும் மேலே!**

எந்த போராட்டத்தையும் நாம் தேடிச் செல்லவில்லை. அரசின் அலட்சியப் போக்கால் அவை நம்மீது திணிக்கப்பட்டுள்ளன. தோழர்களே இப்போது நாம் மேற்கொள்ள வேண்டியது வெறும் போராட்டமல்ல அதற்கும் மேலே. சூழ்நிலைகள், நம் போராட்டத்தை மேலும் மேலும் தீவிரப்படுத்தும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கியுள்ளன. போராட்டம் காலத்தின் கட்டாயமாகியுள்ளது நாட்டில் பல்வேறு விதமான தொடர்ச்சியாக நிகழும் போராட்டங்களை அரசாங்கம் கண்டுகொள்ள மாட்டேன் என்று கண்ணை மூடிக்கொண்டிருக்கும் நிலையில் போராட்டத்தைத் தாண்டி நாம் வேறு வழியை கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. இனி போராராட்டங்களால் மட்டும் பயன்கிட்டாது அதற்கும் மேலே ஏதாவது செய்தாக வேண்டும் என்கிற நிர்ப்பந்தத்திற்கு நாம் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறோம். தொண்டைக்குழிக்குள் இருந்து, வந்த குரல்களில் இனி தீப்பொறி பறக்கட்டும், கொடி ஏந்திய கரங்கள் இனி தீப்பந்தமாக மாறட்டும். வென்று முடிக்க வேண்டிய பகையை இனியும் நாம் பார்த்திருப்பது கூடாது தோழர்களே. நாம் இதுவரை பயந்திருந்தோம் என்று கூறியவர்கள் கொஞ்சம் புருவம் உயர்த்தி பார்க்க வைப்போம், "நாம் பயந்திருக்கவில்லை, பதுங்கியிருந்தோம் வேங்கைகளைப் போல" என்பதை அவர்கள் உணர வைப்போம். மாநில பிரதிநிதித்துவ பேரவை அகிலம் அதிர அறைகூவல் விடுக்கிறது.

இம்மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் கீழ்க்கண்ட இயக்கங்களை வலுமிக்க போராட்டமாக நடத்திட தமிழக அரசின் ஊழியர் விரோத, மக்கள் விரோத போக்கை கண்டித்து, களம் இறங்குவோம். நமது கோரிக்கைகளை வென்றிட

- 2021 ஜனவரி 5 முதல் 12ம் தேதிவரை கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் பிரச்சார இயக்கமும், உறுப்பினர் சந்தா இயக்கத்தையும் நடத்திடுவது.
- 2021 ஜனவரி 19-20 தேதிகளில் மண்டல அளவில் போராட்ட ஆயத்த மாநாடுகள் நடத்திடுவது.
- 2021 ஜனவரி 27-ல் மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாட்டினை மதுரையில் நடத்திடுவது.
- 2021 பிப்ரவரி 2 முதல் மாநிலம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் தொடர் மறியல் போராட்டம் நடத்தி சிறைகளை நிரப்புவது.

(மு.அன்பரசு)
மாநிலத்தலைவர்

(ஆ.செல்வம்)
பொதுச்செயலாளர்

# மாநிலப் பேரவையின் முடிவுகளும் நமது கடமைகளும்

## அன்பிற்குரிய தோழர்களே

சங்க காலத்தில் வாழ்ந்த கடையெழு வள்ளல்களில் ஒருவரான அதிமான் நெடுமான் அஞ்சி ஆட்சி புரிந்த தருமபுரி மண்ணுக்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாக அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவை டிசம்பர் 20ல் மிக எழுச்சி கரமாக நடைபெற்றது.

தமிழகத்தின்பட்டி தொட்டிகளில் எல்லாம் தற்போது ஒரு முழக்கம் கேட்டுக் கொண்டே இருக்கிறது. சாதனைபுரிந்த பத்தாண்டு தொடர் ஆட்சி சரித்திரம் பேசும் பல்லாண்டு என்பதுதான் அந்த முழக்கம்

கோவிட் 19-கொரோனா வைரஸ் தொற்றி னால் மக்கள் அச்சத்தின் பிடியிலிருந்து இன்னும் அகலாத நிலையில் அதிமுகஆட்சி தொடர்ந்து நூற்றாண்டுகள் சாதனை பத்தாண்டில் முடித்துள்ளது என்ற முழக்கம் தமிழகமெங்கும் ஓங்கி உரக்க முழங்கப் பட்டது. ஆனால் உண்மையில் இன்றைய நிலைக்கு பொருத்தமான முழக்கங்களா?. இந்த முழக்கங்கள், குறித்து அரசு ஊழியர் களின் கருத்து என்ன? அது ஒரு புறம் இருக்கட்டும் தமிழ மக்கள் ஆள்வோரின் இத்தகைய முழக்கங்களை வழி மொழியும் நிலையில் இருக்கிறார்களா?

தமிழக அரசின்சாதனைபுரிந்த பத்தாண்டு சரித்திரம் பேசும் பல்லாண்டு, எனும் முழக்கத்தை ஓங்கி உரக்க முழங்க தமிழக மக்கள் தயாராக இல்லை என்பதே உண்மை நிலையாக உள்ளது.இந்த கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மக்கள் வாழ்வாதாரம் இழந்து துன்பம் துயரங்களுக்கு ஆளாக்கப்பட்டு கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டு இருக் கிறார்கள். இந்த காலத்தில் மக்களின் வாங்கும் சக்தி குறைந்துள்ளது, விண்ணை எட்டும் விலைவாசி உயர்வு, சட்டம் ஒழுங்கு சீர்குலைவு போன்ற பிரச்சனையில் தமிழக மக்களின் அன்றாட வாழ்வு சிக்கலுக்கு உள்ளாகி இருக்கிறது கடும் விலைவாசி உயர்வு வேலையின்மை இன்று பிரச்சனை யாக மாறியுள்ளது, ஒரு கிலோ அரிசி 20 ரூபாய்க்கு வழங்குவது, அடித்தட்டு மக்கள், வீட்டில் அடுப்பெரிய உதவுகிறது. சென்னை மாநகராட்சியில் அம்மா உணவகங்கள் மிக மிகஅடித்தட்டுமக்களின்வயிறுகளுக்கு பந்தி பரிமாறுகின்றன, என்பதெல்லாம் உண்மை தான். ஆனாலும் இவை தமிழகத்தின் அனைத்து பகுதி மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதாக இல்லையே.

ஒரு காலத்தில் கிராமங்களில் சிறுவர்கள் எங்கள் வீட்டில் நெல்லுச்சோறு என்று சொல்லிக்கெண்டு திரிவார்கள் அப்படி ஆபூர் வமானதாக அன்று நெல்லுச்சோறு இருந்தது. தற்போதும் அப்படி ஒரு சூழ்நிலையை நோக்கி நம் வாழ்நிலை சென்று கொண்டிருக்கிறது தரமான அரிசிக்கும் பருப்புக்குமான விலை நம்மால் தர முடியாத அளவிற்கு உயரத்தில் உள்ளது. விலைவாசி உயர்வில் மானிய விலையில் அரிசி, பருப்பு விலையிருப்பது நிரந்தர தீர்வாக இருக்க முடியாது. விளைச் சலை அதிகப்படுத்தி உற்பத்தியை பெருக்குவதே தொலைநோக்கில் நிரந்தர நிர்வாக அமையும். இவை குறித்து. தமிழக அரசும் சரி, மத்திய அரசும் சரி எவ்வித முயற்சியும் இல்லாமல், இன்றைக்கு மத்திய அரசு வேளாண் சட்டங்களை, கொண்டு வந்து ஒட்டுமொத்த விவசாயத்தை நிர்த்து யோக செய்துள்ளது. அதற்கு எதிராக நாடு தழுவிய அளவில் விவசாயிகள் வீரம் செறிந்த போராட்டத்தை 60 விவசாயிகள் இறந்த பிறகும் தொடர்ச்சியாக போராட்டம் நடத்தி கொண்டு வருகிறார்கள். உலக முழு



வது இப்போராட்டம், எழுச்சிமிக்க போராட்ட மாக தொழிலாளி வர்க்கம் பார்க்கிறது.

கொரோனா வைரஸ் தொற்றும் ஏதேச்சதி கார ஆட்சி மக்களின் வாழ்க்கையில் கடும் நாசத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. நாட்டின் பல பகுதிகளில் பஞ்ச நிலைமை ஏற்பட்டிருக் கிறது. 2020 உலகில் பட்டினி நாடுகளில் இந்தியா உலகில் உள்ள 107 நாடுகளில் 94 ஆவது இடத்திற்கு சரிந்திருக்கிறது.

நாட்டிலுள்ள இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளில் 7 கோடி (70 லட்சம்) டன்கள் உணவு தானியங்கள் இருப்பு உள்ள நிலை யிலேயே இவ்வாறு பட்டினிக் கொடுமைக் குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் 435 பொருட்களை அடிப் படையாக வைத்து அப்பொருட்களின் விலை மாற்றத்தை ஒவ்வொரு வாரமும் கணக்கு எடுத்து பண விக்கத்தை கணக்கிடுவதாக அரசு சொல்கிறது இந்த 435 பொருட்களில் 100க்கும் அதிகமானவை நுகர்வோருக்கு அதிப்பயனற்றவை என்பதும் இந்த பொருட் கள் 1993-94ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டவை என்பதும் நாம் கவனிக்க தக்கதாகும், இப்படி என்னதான் கணக்கிட்டு நமக்கு அகவிலைப்படி கொடுத்தாலும் அவை ஏறிவரும் விலைவாசியை ஈடுகட்டுவதாக இல்லை என்பதே உண்மையாகும். (உதார ணம் இந்த கொரோனா காலத்தில் நமக்கு வழங்க வேண்டிய அகவிலைப்படி 11/2 ஆண்டுக்கு முடக்கப்பட்டுள்ளது.)

கொரோனா நோய்தொற்று உலகில் அமெரிக்காவிற்கு அடுத்து இரண்டாவது நாடாக இந்தியா மாறியிருக்கிறது. இவ்வாறு தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண் ணிக்கை 1 கோடியை தாண்டிவிட்டது. சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் பேர் இறந்துள்ளனர். அவசர கதியில் அறிவிக்கப்பட்ட பொது முடக்கத்தால் அதே, போல் சொந்த கிராமங் களுக்கு பசி பட்டினியுடனும் நோய்களுட னும் பல்லாயிரம் மைல்கள் நடந்தே செல்ல வேண்டிய கொடூரமான நிலையை ஏற்படுத் தியது. இந்த முரட்டுத்தனமான மத்திய அரசங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட மிக பெரும் துன்ப துயரம்.

மத்திய அரசு கொரோனா வைரஸ் பாதிக்கப் பட்டவர்களுக்கு 20 லட்சம் கோடி ரூபாய் அறிவித்தது. ஆனால் பாதிக்கப்பட்டோர் களுக்கு இதுவரை செலவு செய்திருப்பது 2.5 லட்சம் கோடி தான் என்பது என பத்திரிக்கைகள் கூறுகிறது. இது உள்நாட்டு உற்பத்தியில் 2 சதவீதம், பொருளாதாரத்தை மீட்டெடுக்க மக்களுக்கு நேரடியாக பணம் வழங்கிட வேண்டும் என்று நவீன தாராளமய பொருளாதாரவாதிகளே அரசாங்கத்திற்கு அறிவுரை வழங்கியுள்ள போதிலும் அதையும் கேட்ககூட அரசாங்கம் மறுத்து வருகிறது.

கொரோனா வைரஸ் தொற்றை அடுத்து அரசாங்கம் அறிவித்த நிதித் தொகுப்புகள் கார்ப்பரேட்டுகள் லாபத்தை அதிகரிக்க செய்திருக்கிறது. 2.3.2019 டிசம்பரில் - இறுதியில் 80 பில்லியன்களாக இருந்த எண்ணிக்கை இப்போது 90ஆக உயர்ந்திருக் கிறது முகேஷ் அம்பானி சொத்து மத்திப்பு 6.43 டிரில்லியன் அளவிற்கு அதாவது 37.2 சதவீதம் உயர்ந்திருக்கிறது. அதானியின் சொத்து மதிப்பு 3.02 டிரில்லியன் அளவிற்கு அதாவது 113சதவீதம் உயர்ந்திருக்கிறது. இதுதன் மக்களுக்கான அரசா என்பதையும் 2025ல் உலகில் வல்லரசு நாடுகளில் ஒன்றாக மாறும் என்று பிரதமர் மோடி அவர்கள் கூறி வருகிறார்.

தமிழகத்தை பொறுத்தவரை சட்டம் ஒழுங்கு சீர்குலைவு இன்று நாள்தோறும் கொலை கொள்ளை, வழிப்பறி, பாலியல் பலாத்காரம் எனக் குற்றங்கள் பெருகி வரு கின்றன. இதில் அரசின் கவனம் இதை தடுப்பதற்கு காவல்துறை நடவடிக்கை உரிய முறையில் இல்லை. ஆனால் அரசு ஊழியர்கள் அகிம்சா வழியில் போராட்டம் நடத்த வேண்டும் என்றால் கூட இங்கு அனுமதி பெறுவது அவ்வளவு எளிதல்ல என்ற நிலையுள்ளது. தமிழகத்தில் ஒரு நேர்மை யான நிர்வாகம் இல்லை என்றே சொல்ல லாம் உதாரணம் சத்துணவு ஊழியர்கள்

சங்கத்தின் சார்ப்பில் விடுப்பு நாளில் போராட்டம் நடத்தினால் சம்பளப்பிடித்தம் செய்யப்படுகிறது. இது ஜனநாயக தொழிற் சங்க குரல்வலையை நெறிக்கும் செயலாக இருக்கிறது அரசு ஊழியர்களின் ஒவ்வொரு பதவி உயர்விலும், இடமாறுதலிலும், பல் வேறு முறைகேடுகள், நடந்தேறி வருகிறது நியாயமான கோரிக்கைகளுக்காக போராடி வரும் அரசு ஊழியர்களை அழைத்து பேசி பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கு பதிலாக, போராடும் ஊழியர்களை, சங்கத் தலைவர்களை பழிவாங்கும் நோக்கோடு ஒட்டு மொத்தமாக தொலை தூரங்களுக்கு மாறுதல் செய்வது என்பது அன்றாடம் வாடிக்கையாக உள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர், அமைச்சர்களை பலமுறைசந்தித்துமுறையீடுகொடுத்த பிறகும் நமது கோரிக்கையை தீர்க்கப்படவில்லை,மத்திய அரசு 1.1.2004க்குபின்புதிய ஒய்வூதியத் திட்டத்தை அமல்படுத்தியது. ஆனால், தமிழகத்தில் 1.4.2003 முதல் இத்திட்டத்தை அன்றைய முதல்வர் அமுல்படுத்தினார். கடந்த சட்டமன்ற தேர்தலியின் போது தங்கள் ஆட்சிக்கு வந்தால் புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்வதாக வாக்குறுதி அளித்தார்.

அந்த வாக்குறுதி இன்று வரை நிறைவேற்றப்படவில்லை 1.1.2004க்குபின் மத்திய அரசுப்பணிக்கு வந்து அதன் பின்பு இறந்த போன ஊழியர்களின் குடும்பத்தினருக்கும் இயலாமை காரணமாக ஒய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வூதியம், பணிக்கொடை எல்லாம் மத்திய அரசு வழங்கி வருகிறது ஆனால் தமிழகத்தில் அவ்வாறு வழங்கப்படவில்லை.

தமிழக அரசின் சத்துணவுத் திட்டத்தில் 37 ஆண்டுகளுக்கும் மேலாக கொத்தடிமைக் கூலிகளாகப் பணியாற்றும் சத்துணவு ஊழியரகள் பல்வேறு கட்ட போராட்டங்கள் நடத்தியும்தமிழ அரசு கோரிக்கைகளை நிறைவேற்றப்படவில்லை, அதேபோல் 2019ல் நடைபெற்ற ஜாக்டோ ஜியோ போராட்டத்தில் பங்கேற்ற ஊழியர்கள் மீது 17B 5068 பேர் குற்றகுறிப்பாணை மேலும் நமது சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியன், உள்ளிட்ட 7 தோழர்களின் தற்காலிக பணிநீக்கம் ரத்து செய்யப்படவில்லை. இத்தகைய சூழ்நிலையில் நமது கோரிக்கை வென்றெடுக்க டிசம்பர்-20, 2020 தேதியில் தர்மபுரியில் நடைபெற்ற நம்முடைய மாநில பிரதிநிதித்துவப் பேரவை கீழ்க்கண்ட அறைகூவல் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

✱ ஜாக்டோ, ஜியோ போராட்டத்தில் ஈடுபட்டதற்காக முன்னாள் மாநிலத் தலைவரும் ஜாக்டோ - ஜியோ முன்னாள் ஒருங்கிணைப்பாளருமான தோழர் தோழர். மு.சுப்பிரமணியன் உள்ளிட்ட அரசு ஊழியர், ஆசிரியர், மீதான 17 பி குற்றச்சாட்டு, தற்காலிக பணிநீக்கம், பல்வேறு குற்றச்சாட்டுக்களை திரும்பபெற வேண்டும்.

✱ புதிய ஓய்வூதியத்திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.

✱ சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர், ஊர்புற நூலகர்கள் எம்ஆர்பி செவிலியர்கள், ஊராட்சி செயலாளர்கள், உள்ளிட்ட 3 1/2 லட்சம் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும்.

✱ அரசுத்துறையில் அவுட்சோர்சிங் முறை மற்றும் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை கைவிட வேண்டும்.

✱ ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தை கைவிட வேண்டும்.

✱ தமிழக அரசு துறைகளில் உள்ள 41/2 லட்சம் காலிபணியிடங்களை உடனே நிரப்பிட வேண்டும்.

✱ இளைஞர்களின் வேலைவாய்ப்புகளை பறிக்கும் திரு.ஆதிசேஷைய்யா தலைமையிலான பணியாளர் சீரமைப்புகுழுவின் பரிந்துறையை ரத்து செய்திட வேண்டும்.



✱ 2002ல் பணிநீக்கம் செய்யப்பட்ட சாலைப்பணியாளர்களின் பணி நீக்க காலமான 41 மாத காலத்தை பணிக்காலமாக முறைப்படுத்திட வேண்டும்.

✱ மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி ஊழியர்களை அரசு ஊழியர்களாக்கி கருவூலம் மூலம் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

✱ 1.1.2016 முதல் 21 மாத கால நிலுவைத் தொகை வழங்கிட வேண்டும்.

✱ தொழில் நுட்ப ஊழியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி களையபட வேண்டும்.

✱ அமைச்சுப் பணியாளர்களின் ஊதிய மாற்றத்தை ஒழுங்கமைக்க வேண்டும்.

✱ காப்பீட்டுத் திட்டத்தை அரசே ஏற்று நடத்திட வேண்டும்.

தமிழக அரசு ஊழியர்களின் பிரச்சனைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்து அரசு மட்டத்திலும் உயர் அலுவலர்களிடமும் பல்வேறு முறையீடுகள் மற்றும் கோரிக்கை தீர்மானங்கள் வழங்கியும் நாளது வரை எவ்வித தீர்வும் காணப்படாத நிலையில்

தமிழகத்தின் அரசு தலைமைச் செயலாளரை சந்தித்து ஊழியர் பிரச்சனைகள் கோரிக்கைகள் தொடர்பாக எடுத்துரைத்திட காலமும் நேரமும் கேட்டு கடந்த 2 ஆண்டு காலம் ஆன நிலையில் சங்க நிர்வாகிகள் சந்திப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்புலத்தில் தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்த்திட ஆர்ப்பாட்டம் வட்ட, மாவட்ட அளவில் ஆர்ப்பாட்டம், மண்டல, மாவட்ட அளவில் உண்ணாவிரதம், மக்கள் ஊழியர் சந்திப்பு இயக்கம், கோட்டை நோக்கி பேரணி உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களை நடத்தியும் தீர்வு காணாத நிலையில் முன்னாள் முதல்வர் தேர்தல் வாக்குறுதியில் சொன்னது போல் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும் என்ற அடிப்படையில் பல முறை முதல்வர் அலுவலகம் மற்றும் முதல்வரின் தனிச்செயலாளர் ஆகியோரிடம் முறையீடு வழங்கப்பட்டும் நாளது வரை தமிழக முதல்வரை தமிழகத்தில் உள்ள லட்சக்கணக்கான ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளநிலையில்டிசம்பர் 20ம் தேதி அன்று தருமபுரியில் கூடிய மாநில பிரதிநிதித்துவப் பேரவை ஊழியர்களின் மேற்கண்ட பிரதான கோரிக்கைகளை வலியுறுத்தி அறைகூவல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதில் நான்கு கட்ட இயக்கத்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1. 2021 ஜனவரி 5 முதல் 12 வரை கோரிக்கைகளை வலியுறுத்தி மாநில முழுவதும் பிரச்சார இயக்கமும், உறுப்பினர் சந்தா சேர்ப்பு இயக்கம் நடத்துவது

**2.** 2021 ஜனவரி 19,20 தேதிகளில் மண்டல அளவில் போராட்ட ஆயத்த மாநாடுகள்

**3.** 2021 ஜனவரி 27ந் தேதி மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாடு மதுரையில் நடத்துவது.

**4.** 2021, பிப்ரவரி 2 முதல் மாநில முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் தொடர் மறியல் மற்றும் சிறை நிரப்பும் போராட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டதை தொடர்ந்து, இந்த நான்கு கட்ட இயக்கங்கள் வெற்றிகரமாக்கிட கடைக்கோடி ஊழியர்களுக்கும் நமது கோரிக்கை சென்று அடைகின்ற வகையில் விரிவான பிரச்சாரமும், மண்டல அளவில் ஆயத்த மாநாடுகளில் அதிகமான ஊழியர்களை திரட்டி நடத்திடவும், பிப்ரவரி - 2ம் தேதி முதல் தொடர் மறியல், மற்றும் சிறை நிரப்பும் போராட்டத்தில் மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான ஊழியர்களை திரட்டி களம் காண்போம்,

மாநில பேரவையின் முடிவுகளை வெற்றிகரமாக அமுலாக்குவோம்! கோரிக்கைகளை வென்றெடுப்போம்!



# மாநில பிரதிநிதித்துவப் பேரவை வரவேற்புரை

அன்புடையீர் வணக்கம்.

சங்க காலத்தில் வாழ்ந்த கடையெழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் நெடுமான் அஞ்சி ஆட்சிபுரிந்த தருமபுரி மண்ணுக்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாக அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவையை நடத்த அனுமதி கொடுத்த மாநில மையத்தை மனதார பாராட்டுகிறோம்.

பழைய கற்காலத்திலிருந்து இன்றைய காலம் வரை மனிதனின் கால்பதிந்த சுவடுகள் கொண்ட பெருமை வாய்ந்த இடங்களில் ஒன்றாக தகடூர் நாடு என்றழைக்கப்படும் தருமபுரி மாவட்டம் வரலாற்று பெருமையோடு திகழ்கின்றது. இதற்குக் காரணம் இப்பகுதியின் அமைவிடமும், சுற்றுப்புற சூழலும், தட்பவெப்பமும் தான். தமிழக வரலாற்றின் தந்தை என்றழைக்கப்படும் புவியியல் ஆராய்ச்சியாளர் இராபர்ட் புரூஸ்புட் என்பார் தருமபுரியை ''ஆதிமனிதனின் நாகரிகத் தொட்டில் '' என்று பதிவு செய்திருக்கிறார் .

'' வெல்போர் ஆடவர் மறம் புரிந்து காக்கும்

வில் பயில் இறும்பின் தகடூர் ''

என்று இதன் பெருமையை பதிற்றுப்பத்து பகர்கின்றது .

'' அமரர் பேணியும் ஆவுதி அருத்தியும்''

அரும்பெறல் மரபின் கரும்பு இவண் தந்தும்

அதியன் மரபினர் கரும்பைத் தமிழகத்திற்கு கொணர்ந்தார் என புறநானூறு குறிப்பிடுகின்றது.

இப்படி ஏராளமான இலக்கியப் பெருமைகளுடன் மட்டுமல்லாது காஞ்சி, மதுரைக்கு அடுத்து தொன்மையான நகரமாகவும், வரலாற்றில் தனிச் சிறப்பைப் பெற்று திகழும் தகடூர் என்னும் தருமபுரியில் நடைபெறும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவைக் கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள தலைவர்களையும், பிரதிநிதித் தோழர்களையும், வரவேற்புக் குழுவின் சார்பில் வருக... வருக .... என வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

நீண்ட நாள் உயிர்வாழ தனக்குக் கிடைத்த அரிய நெல்லிக்கனியை தான் உண்ணாமல் தமிழ்வாழ வேண்டுமென தமிழுக்குத் தொண்டு செய்யும் அவ்வைக்கு கொடுத்து மகிழ்ந்த அதியமான் ஆட்சி புரிந்த நாடு தகடூர் ஆகும், அதியன் மரபினருக்குப் பிறகு களப்பிரர், பல்லவர், பாண்டியர், நுளம்பர், சோழப் பெருவேந்தர்கள், விஜயநகர பெருவேந்தர்கள், மைசூர் உடையார்கள், ஹைதர் அலி, திப்பு சுல்தான் ஆகிய அரச மரபினருக்குப் பிறகு ஆங்கிலேயர் ஆட்சி வரை பல மாற்றங்களை உள்வாங்கிக்கொண்டு பல மொழிகளைப் பேசும் மக்களைக் கொண்ட மாவட்டம் தருமபுரி ஆகும்.

தகடூரை ஆண்ட மன்னர்களுடைய பெருமையைப் பறைசாற்றக்கூடிய வகையில் நுளம்பர் கால தருமபுரி கோட்டை மல்லிகார்ஜூன சுவாமி கோயில் 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இக்கோயிலின் தொங்கும் தூண் இன்று வரை அதே பொலிவுடன் கம்பீரமாக நிற்பது அக்கால கட்டிடக் கலையின் சிறப்பம்சமாகும். 13 – ஆம் நூற்றாண்டில் விஜயநகர பேரரசர்களால் கட்டப்பட்ட தென்கரைக்கோட்டை கல்யாண ராமன் கோவில் இன்றும் தருமபுரியின் வரலாற்றை உலகறிய செய்கிறது. தருமபுரியின் கிழக்கே அமைந்துள்ள சோழர்காலப் பெருமையை எடுத்தியம்பும் தீர்த்தமலை ஈஸ்வரன் கோயில், அதியன் காலத்தில் கட்டப்பட்ட காலபைரவர் கோயில் ஆகிய வழிபாட்டுத்தலங்கள் தருமபுரியின் வரலாற்றை என்றென்றும் நின்று பறைசாற்றும்.

உழைப்பாளி மக்களின் கலைத் திறனையும், மன்னர்களுடைய கலை ஆர்வத்தையும் பறைசாற்றும் வகையில் தகடூர் நாட்டில் உள்ள கலை பண்பாட்டு எச்சங்கள் இன்றும் நிரம்பிக் கிடக்கின்றன. ஜெக தேவராயர்கள் ஆட்சிக்காலத்தில் தருமபுரி மாவட்டத்தைச் சுற்றி ''பாராமகால்'' என்று சொல்லக்கூடிய 12 கோட்டைகள் கட்டி, எதிரிகளால் ஆபத்து ஏற்படாவண்ணம் நாட்டை காத்து வந்தனர். அந்தக் கோட்டைகள் தற்பொழுது அங்கொன்றும், இங்கொன்றும் சிதிலமடைந்து இருந்தாலும் அக்கால மக்களின் வாழ்வியலையும், மன்னர்களின் ஆட்சி பரிபாலனத்தையும் தெரிந்து கொள்ள உதவுகிறது.

தித்திக்கும் மாம்பழம் சேலத்து மாம்பழம். இல்லை இல்லை. 1963 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலிருந்து தருமபுரி பிரிக்கப்பட்டதற்குப் பிறக, தருமரி மாம்பழம் என்று கூறுவது சாலம் வாருத்தமானது. ஏனெனில், பல லட்சம் ஏக்கர்களில் மா சாகுபடி செய்து வெளிநாடுகளுக்கு பாறமதி செய்யும் மாவட்டமாக இன்றும் தருமபுரிதான் முன்னணியில் விளங்குகின்றது.

தமிழகத்தின் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான ''ஆசியாவின் நயாகரா'' என்று அழைக்கப்படும் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி தருமபுரியில் இருந்து 48 கிலொமீட்டர் தொலைலே அமைந்துள்ளது. ஒவ்வோர் ஆண்டும் பல லட்சக்கணக்கான வெளிமாநில சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் இடமாக ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி இயற்கை சூழலுடன் அமையப்பெற்றுள்ளது. மலைகளால் சூழப்பட்ட இம் மாவட்டத்தின் கிழக்கே அமைந்துள்ள தேனாண்டாள் மலைத் தொடரில் (தீர்த்தமலை ) 47 கோடி டன் இரும்புத்தாது உள்ளது. தற்போது மத்திய அரசு அறிவித்துள்ள 8 வழிச்சாலை சென்னை சேலம் ) இதன்மீதே அமைய உள்ளது . மேலும் தீர்த்தமலை வரலாற்று பெருமைகளுடன் கூடிய சுற்றுலாத்தலமாகும். எல்லாப் பருவ காலங்களிலும் இம்மலையின் உச்சியிலிருந்து நீர் ஊற்று வந்து கொண்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

உணவு சேகரிக்கும் நிலையிலிருந்து, உணவு உற்பத்தி செய்யும் நிலைக்கு இம்மாவட்ட மக்களைக் கொண்டு சென்றதில் மாவட்டத்தில் ஓடும் காட்டாற்று நதிகள் பெரும் பங்காற்றுகிறது. மார்க்கண்டேய நதி, வாணியாறு, சின்னாறு, சனத்குமார நதி, நாகாவதி, தொப்பையாறு போன்ற நதிகள் விவசாயத்திற்கும், கால்நடை வளர்ப்பிற்கும், மக்களின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளது. மிகவும் தொன்மையான காவிரி மற்றும் தென்பெண்ணை ஆகிய இரண்டு முக்கிய பெரிய ஆறுகள் இம்மாவட்டத்தில் ஓடுகின்றன. இவை இரண்டும் மாவட்டத்தின் நிலப்பரப்பிற்கு மிகவும் தாழ்வான பகுதியில் ஓடுவதால் விவசாயத்திற்கு பயன்படுத்த முடியவில்லை.

தருமபுரி மாவட்ட மக்களின் நன்மதிப்பை பெற்ற ஆங்கிலேய அதிகாரி சர் தாமஸ் மன்றோ வருவாய் கண்காணிப்பாளராக இருந்தபோது விவசாயிகளிடம் இருந்து முறைகேடாக வசூலிக்கப்பட்ட வரியை ரத்து செய்து நிலவரி சீர்திருத்தச் சட்டம் இரயத்துவாரி முறை இங்கு தொடங்கி நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டது .

1931 விருந்து 1933 வரை உலக பெரும் பொருளாதார நெருக்கடி அறியப்பட்ட காலத்தில் மாவட்டத்தின் ஒருங்கிணைந்தப் பகுதியாக இருந்த ராயக்கோட்டையைச் சார்ந்த விவசாயிகள் குழு பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு வரிகொடா இயக்கத்தை நடத்தியது வரலாற்றுப் பக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. சுதந்திரப் போராட்டக் காலத்திலும், வேறு பல கட்டங்களிலும் இடதுசாரி இயக்க தலைவர்களை அரண்போல் பாதுகாத்தது இந்த மண் என்பதை நினைவுபடுத்துகிறோம்.

இந்திய சுதந்திர போராட்டத்தில் களமாட பல தலைவர்களை இம்மாவட்டம் உருவாக்கிக் கொடுத்துள்ளது என்பதை வரலாறு அறியும். இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் ராஜகோபாலாச்சாரியார். தியாகி தீர்த்தகிரியார். போன்றோர் பிறந்த மாவட்டம் தருமபுரி வ.உசி – யுடன் இணைந்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட சுப்பிரமணிய சிவா இறுதிக்காலத்தில் விடுதலை வேட்கைவுடைய பல இளைஞர்களை இங்கு உருவாக்கினார். அவருடைய நினைவுச்சின்னம் தருமபுரியிலிருந்து 12 கிலோமீட்டர் தொலைவிலுள்ள பாப்பாரப்பட்டி என்னும் நகரில் அமைந்துள்ளது.

மேலும் டாக்டர் அண்ணாஜி , லலிதா அண்ணாசி ஆகிய சுதந்திர போராட்டத் தலைவர்கள் இந்த மாவட்ட மக்களுக்கு இலவச மருத்துவம் பார்த்ததோடு, சமூக விடுதலைக்காகவும் போராட்டக்களத்திலும் பணியாற்றினார்கள். சிஐடியு – வின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரான தோழர் கே.எம்.ஹரிபட் அவர்கள் தொழிற்சங்க பணிக்காக சென்னையிலிருந்து தருமபுரி வந்து தொழிலாளி வர்க்கத்தின் உரிமைப் போராட்டத்தை உயிர்த்தெழச் செய்ததோடு தொழிற்சங்க இயக்கத்தை விரிவுபடுத்துவதில் பெரும் பங்காற்றினார்.

தருமபுரி மாவட்டத்தில் கருவூலத்துறை ஊழியர்கள், பட்டுவளர்ச்சித்துறை ஊழியர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பணியாற்றிய முன்னணித் தோழர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய ஒருங்கிணைப்பில் தருமபுரி மாவட்டத்தில் 1984 – ம் ஆண்டில் அரசு ஊழியர் சங்கம் தொடங்கப்பட்டது. தருமபுரி மாவட்ட அரசு ஊழியர் சங்க ஸ்தாபக தலைவர் தோழர் டி சண்முகம் அவர்கள் மாவட்டம் முழுதும் உள்ள பலதுறைகளில் சங்க கிளைகளை உருவாக்கினார். அவர் இயக்கப் பணியைப் பொருளாதார கோரிக்கைகளுடன் இணைத்து சமூக, அரசியல் புரிதலை ஊழியர்களிடையே ஏற்படுத்தினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத் தலைவராக சிறப்பாகப் பணியாற்றியபோதே விருப்ப ஓய்வு பெற்று இம்மாவட்ட இடதுசாரி இயக்க பணிக்கு தன்னை இணைத்துக் கொண்டு இறுதி மூச்சுவரை தொழிலாளி வர்க்கத்திற்காக பணியாற்றினார் என்பதை பெருமையுடன் நினைவு கூறுகிறோம்.

தருமபுரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு ஊழியர் சங்கம், தோழமை தொழிற்சங்க அமைப்புகளோடு நல்லுறவு கொண்டு ஆக்கபூர்வமான போராட்டங்களை நடத்தி வந்திருக்கிறது. மத்திய, மாநில அரசுகளின் தவறானக் கொள்கைகளை எதிர்த்த தொழிற்சங்கங்களின் உரிமைப் போராட்டம், மாவட்ட மக்களின் அடிப்படை வசதிகளுக்கான போராட்டம் என்ற வகையில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம், மொரப்பூர் தருமபுரி இருப்புப்பாதை திட்டம், மாவட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கக்கூடிய சிப்காட் திட்டம் மற்றும் மாவட்ட வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்குவதில் தொழிற்சங்கங்களுடன் இணைந்து தருமபுரி மாவட்ட அரசு ஊழியர் சங்கம் பல போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வந்துள்ளது. தொழிலாளி வர்க்கத்தின் கேடயமாக செயல்படும் சிஐடியு தொழிற்சங்கத்துடன் நேசக்கரம் நீட்டியதோடு, பல கட்டங்களில் இணைந்து போராடக் கூடிய அமைப்பாகவும் , செயல்பட்டு வருகிறது என்று பெருமையோடு சொல்லிக் கொள்கிறோம்.

2019 – ஆம் ஆண்டு தமிழக அரசின் தவறான கொள்கைகளான – அரசுப் பணியிடங்களை ஒழிப்பது, 8000 கிராமப்புற அரசு பள்ளிக்கூடங்களை இழுத்து மூடுவது, சத்துணவு மையங்களை மூடுவது ஆகிய ஊழியர் விரோத போக்கை கைவிட வலியுறுத்தியும், புதிய ஓய்கூதிய திட்டத்தை ரத்து செய்யவும், காலிப்பணியிடங்களை நிரப்பிடவும் வலியுறுத்தி அரசு ஊழியர் சங்கம் தலைமை தாங்கி நடத்திய ஜாக்டோ – ஜியோ போராட்டத்தில் சிறை சென்ற வீரப் பெண்மணி ஒருவர் தமிழகத்தில் உண்டெனில் அவர் இம்மாவட்டத்தைச் சார்ந்தரும் தற்போது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் தோழர் . கோ.பழனியம்மாள் என்பதைப் பெருமையோடு இப்பேரவையில் பதிவு செய்கிறோம்.

தமிழ்நாடு அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காகவும், அரசினுடைய தவறானக் கொள்கைகளை எதிர்த்து நீண்ட நெடிய போராட்டத்தில் களமாடி, பல விழுப்புண்கள் தாங்கிய தலைவர்கள் தருமபுரி மண்ணுக்கு வந்திருப்பது எங்களுக்கு மேலும் உத்வேகத்தை அளிக்கிறது, உங்களுக்கு சேவையாற்றுவதில் நாங்கள் உவகைகொள்கிறோம்.

இந்தச் சிறப்பு வாய்ந்த மாநில பிரதிநிதித்துவ பேரவைக் கூட்டத்திற்கு தலைமைப் பொறுப்பேற்றுள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் மு.அன்பரசு அவர்களே ... பேரவைக் கூட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றவுள்ள அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் அ.ஸ்ரீகுமார் அவர்களே ... இப்பேரவையின் ஓர் அங்கமாக நடைபெறும் மகளிர் சிறப்பு அமர்வில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவிருக்கும் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் அகில இந்திய துணைத் தலைவர் தோழர் உ.வாசுகி அவர்களே ... தமிழக தொழிலாளி வர்க்கத்தின் ஒப்பற்ற தலைவரும் களப்போராளியாக செயல்பட்டு வருபவருமான சிஐடியு – வின் மாநிலத் தலைவர் தோழர் அ.சவுந்தரராசன் அவர்களே ... தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் தோழர். ஆ.செல்வம் அவர்களே ... மாநில பொருளாளர் தோழர் மு.பாஸ்கரன் அவர்களே ... அரசு ஊழியர் சங்கத்தின் மாநில நிர்வாகிகளே தமிழகத்தின் எண்திசைகளிலிருந்தும் வருகைப் புரிந்துள்ள பிரதிநிதித் தோழர்களே... இந்தப் பேரவை சிறப்பாக நடைபெறுவதற்காக இரவு பகல் பாராது தேனீக்களை போல பணியாற்றிய தருமபுரி மாவட்ட தலைவர்களே வட்ட நிர்வாகிகளே... மற்றும் முன்னணி ஊழியர்களே.... அனைத்து வகையிலும் இந்த மாநாட்டு பணிகளில் பங்கேற்று ஆகப்பெரிய உதவிகளைப் புரிந்த அரசு ஊழியர் சங்கத்தின் உயிர்மூச்சாக இயங்கிக்கொண்டிருக்கும் உறுப்பினர்களே. உங்கள் அனைவரையும் மாநில பிரதிநிதித்துவப் பேரவை வரவேற்பு குழுவின் சார்பில் மீண்டும் ஒருமுறை வருக... வருக ... என அன்போடும், மகிழ்வோடும் வரவேற்கின்றோம்.

# உண்மை ஜெயித்தது இங்கு பொய்கள் பொசுங்கியது

**த**மிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவ பேரவையினை தருமபுரி மாவட்டத்தில் நடத்த வேண்டும் என்று தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையம் பொறுப்பை கொடுத்த போது இதை எப்படி நாம் செய்து முடிக்கப் போகிறோம் என்ற மலைப்புதான் நம் முன்பு இருந்தது.

உலகையே அச்சுறுத்தும் இந்த பெருந் தொற்று காலத்தில் பேரவையினை எப்படி நடத்துவது? தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரும் நிர்வாகிகளை, சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் பிரதிநிதிகளை, பார்வையாளர்களை, பத்திரிக்கையாளர்களை காட்சி ஊடக வியாலளர்களை, வரவேற்பதும், விருந்தோம்பல் செய்வதும், தங்குவதற்கான வசதிகள் செய்வதும், பேரவை முடிந்ததும் அவர்கள் ஊர் திரும்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்வதும்...... அப்பப்பா எப்படித்தான் செய்யப் போகிறோமோ என்கிற மலைப்பு பதட்டத்தை உண்டு பண்ணிய போதும், எப்போதும் போல் நமது அமைப்புக்கே உரிய ‘எதையும் சவாலாக ஏற்றுக்கொள்வது’ என்ற இயல்பின் அடிப்படையில் பேரவையினை தருமபுரியில் நடத்துவது என்பதை ஏற்றுக் கொண்டோம்.

பேரவைக்கு மண்டபம் பார்க்க வேண்டும். பேரவை நடத்தநிதி திரட்ட வேண்டும். தோழமை சங்கங்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டும். அவர்கள் பங்களிப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்ற செயல் திட்டங்களும் அணிவகுத்து நின்றன. எல்லாவற்றையும் யோசித்துக் கொண்டே இருந்தால் எதுவும் நடக்காது உடனடியாக செயலில் இறங்க வேண்டும் என்று முடிவெடுத்து வரவேற்புக்குழு அமைக்கப்பட்டது. வரவேற்புக்குழுவில் ஒவ்வொரு உறுப்பினரும் தீப்பொறியாக இருந்து, சிறப்புடன் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை அது அமைந்த விதத்திலேயே தெரிந்தது. முதல் வேலையாக பேரவைக்கான இலச்சினை வடிவமைக்கப்பட்டது. அனைத்து மாவட்ட நிர்வாகிகள் கைகளில் கிடைத்ததுமே பேரவை வேலைகள் றெக்கை கட்டி பறக்க ஆரம்பித்தன. பேரவை இலச்சினை எல்லொரையும் கவர்ந்திழுக்க மாவட்டம் தோறும் போஸ்டர்கள் என பேரவை பணிகள் வேகமெடுக்க ஆரம்பித்தன.

கிட்டத்தட்ட அனைத்து வட்டகிளைகளும், பேரவையை கூட்டங்கள், பொறுப்பாளர்களும் நடத்திட நிதி சேகரிப்பது என ஆர்வத்துடன் செயல்பட்டனர். பேஸ்புக், வாட்ஸ்ஆப் போன்ற சமூக வலைத் தளங்களிலும் பேரவை பிரச்சாரங்களை கட்டியது.

அரசு ஊழியர் சங்கம் கேட்கிறது, பேருக்கு ஏதாவது செய்துவிட்டு போவோம் என்றில்லாமல் பொறுப்பிலிருக்கும் நிர்வாகிகளும், தோழமைச் சங்க ஆளுமைகளும், சங்கத்தின் சாதாரண உறுப்பினர்கள் பல பேரும் இந்த பேரவை பணிகளை தங்கள் வீட்டு விழாவைப் போல் தலைமேல் தாங்கி வரவேற்புக்குழு நிர்வாகிகள் அனைவரும் நெகிழத் தக்க வகையில் சுறுசுறுப்புடன் உழைத்தார்கள்.

நாம் பல விழாக்களை நடத்தியிருக்கிறோம். பல பேரவைகளை கண்டிருக்கிறோம். ஆனால் அந்தபேரவைகளுக்கும்நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் மணிமகுடம் வைத்தது போல் அமைந்தது இந்த பேரவை என்றால், உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

தருமபுரியில் கடமைக்காக நடத்தப்பட்ட பேரவை போல் இல்லாமல், சொந்த குடும்ப மண



விழாவைப் போல் ஒவ்வொரு நிகழ்வையும் திட்டமிட்டு நிகழ்த்திக் காட்டியதையும், பொறுப்பை ஏற்றுக் கொண்ட தோழமைகள் ஒவ்வொருவரும் தருமபுரியில் நடக்கும் இந்த பேரவையினை மாவட்டங்களிலிருந்து வரும் எந்த தோழமையும் எந்தக் குறையும் சொல்லி விடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுடனும், பொறுப்புடனும் செயல்பட்டதையும் பார்த்து பேரவை வரவேற்புக்குழு உறுப்பினர்கள் அனைவரும் ஆச்சர்யப்பட்டுப் போனோம் என்பதை விட பிரமித்துப் போனோம் என்பது தான் அர்த்தமுள்ள சொல்லாடலாக இருக்கும்.

பேரவை அழைப்பிதழ், வேலை ஸ்தாபனம் மற்றும் வரவு, செலவு மகளிர் அறிக்கை, மாநாட்டு தீர்மானங்கள், படிவங்கள், அடையாள அட்டைகள், குறிப்பேடுகள் போன்றவற்றை இதுவரை நடந்த பேரவைகளை மிஞ்சும் அளவிற்கு மிக நேர்த்தியாக வடிவமைத்து அச்சிட்டுக் கொடுத்த அச்சக்கலை தோழமைகளே.... விளம்பரங்கள் கொடுத்து பேரவை சிறப்பாக நடத்திட உதவிய தோழமைச் சங்கங்களே, அமைப்புகளே... எல்லோரையும் ஒன்றிணைத்து ஒரு பேரவையினை சிறப்பாகவும், ஒழுங்கமைத்தும், நேர்த்தியாகவும் நடத்திட கடந்த மூன்று மாதங்களாக கண்துஞ்சாமல் பணியாற்றிய வரவேற்புக்குழு நிர்வாகிகளே..... தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொறுப்பாளர்களே..... செயல்மறவர்களே.....முன்னாள் நிர்வாகிகளே..... ஓய்வு பெற்ற பின்னரும் சங்கத்தின் கொடியை விடாமல் உயர்த்திப் பிடித்திருக்கும் தோழமைகளே..... ஒரு வேளை உணவு, செலவு, ஒரு வேளை தேநீர் செலவு என செலவுகளை போட்டி போட்டு ஏற்றுக் கொண்டு பசியாற்றிய வள்ளல்களே..... மகளிர் சிறப்பு அமர்வு பிரதிநிதிகள் சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளிட்ட அனைத்து தோழர்களையும் கவரும் வகையில் மேடை அலங்கரித்த தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்க தோழமைகளே..... கருத்தரங்கில் கலந்து கொண்டு போவை மிளிரச் செய்த மகளிர் துணைக்குழு தோழமைகளே....பேரவைக்கான நிதி பங்களிப்பு மற்றும் உணவுப் பொருள்கள் வழங்கிய தோழமைகளே..... நினைவில் விடுபட்டுப்போய், எண்ண இடுக்குகளில் மறைந்து நிற்கும் தோழமை சொந்தங்களே..... பேரவை உங்கள் அனைவராலும் ஊழியர் வர்க்கத்தின் ஒப்பற்ற உரிமைக்கொடி ஓங்கி உயர்த்திப் பிடிக்கப்பட்டுள்ளது. அரசு ஊழியர்கள் காலையில் கதைபேசி, மாலையில் வாயிலில் ஒன்று கூடி முழக்கமிட்டுவிட்டுத் திரும்பும் வெறுங்கூட்டமல்ல. அது உரிமைகளை திண்ணமாக பெறும் வரையில் ஓயாமல் போரிடும் வீரர் பெருங்கூட்டம் என்பதை நடந்து முடிந்த பேரவை உணர்த்தியுள்ளது.

களைப்பு, ஓய்வின்மை, உறக்கமின்மை, போன்றவை இருந்த போதிலும் ஒரு பெருஞ் செயலை செய்த பெருமிதம் நம்முடைய உணர்வுகளை தட்டியெழுப்பி உள்ளது. புலன்களில் புதுப்பொலிவை கூட்டியுள்ளது. இந்த பேரவை புதிய பாதைக்கான ஒளியை பாய்ச்சியுள்ளது. போராடும் வலிமையைக் கூட்டியுள்ளது. இத்தகைய ஆகப்பெருஞ் செயல் செய்த உங்கள் அனைவரையும் பேரவை நிறைவு நிகழ்ச்சியில் நேரில் சந்தித்து பாராட்டுதல்களை, புரட்சிகர வாழ்த்துக்களை பரிமாறிக்கொண்டு பேரவை பணிகளை நிறைந்த மனதோடு நிறைவு செய்ய உவகையோடும் உரிமையோடும் அழைக்கிறோம். தருமபுரி மாவட்ட தொழிற் சங்க மையத்தில் 10.01.2020 மாலை 3.00 மணியளவில் சங்கமிப்போம் தோழர்களே, கண்டிப்பாக வாருங்கள்.

தோழர்கள் ஒவ்வொருவரும் ‘கமா’க்களை போன்றவர்கள். ‘கமா’க்களுக்கு நிறைவு விழா என்ற ‘முற்றுப்புள்ளி’ எதற்கு என்ற கருத்தாக்கம் எழலாம். இந்த ‘கமா’க்களுக்கு பேரவை நிறைவு விழா என்பது களைப்பாறுதல் மட்டுமேயின்றி ‘முற்றுப்புள்ளி’யல்ல. இந்த ‘கமா’க்கள் பிரச்னைகளுக்கு ‘முற்றுப்புள்ளி’களைத் தேடும் கமாண்டோக்கள். பேரவை நிறைவு விழா என்ற இளைப்பாறுதலுக்கு பிறகு

- 2021 ஜனவரி 5 முதல் 12ம் தேதிவரை கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் பிரச்சார இயக்கமும், உறுப்பினர் சந்தா இயக்கத்தையும் நடத்திடுவது.
- 2021 ஜனவரி 19–20 தேதிகளில் மண்டல அளவில் போராட்ட ஆயத்த மாநாடுகள் நடத்திடுவது
- 2021 ஜனவரி 27–ல் மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாட்டினை மதுரையில் நடத்திடுவது.
- 2021 பிப்ரவரி 2 முதல் மாநிலம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் தொடர் மறியல் போராட்டம் நடத்தி சிறைகளை நிரப்புவது.

மேற்கண்ட சவால்களை தமிழகமே திரும்பி பார்க்கும் வகையில் எதிர்க்கொள்ள ஆயத்தமாவோம் தோழமைகளே.....

உயர்த்திப்பிடி சங்கக்கொடிக் கோலை!
சுழற்றி வீசு தோழமை கூர்வாளை !
புரட்சி செய்ய வந்தது காண் வேளை !
உரிமை பெறும் வரை இறுக்கி வை தோளை !

**- மாவட்ட நிருவாகிகள் தருமபுரி**

## மத்திய வேளாண்மை சட்டங்களை திரும்ப்பெற வலியுறுத்தி மாவட்ட தலைநகரில் ஆதரவு ஆர்ப்பாட்டம்

### கிருட்டினகிரி

புதிய வேளாண் சட்டங்களை திரும்பப்பெற வேண்டும் என்று தலைநகர் டெல்லியில் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் கடந்த 12 நாட்களாக தொடர்ந்து போராடி வரும் விவசாயிகளுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கிருட்டினகிரி மாவட்ட மையத்தின் சார்பாக 08.12.2020 அன்று மதிய உணவு இடைவேளையின்போது வட்டாட்சியர் அலுவலக வளாகம் எதிரில் “ஆதரவு ஆர்ப்பாட்டம்“ நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் B.சந்திரன் தலைமை தாங்கினார்.மாவட்ட செயலாளர் R.நடராஜன் கோரிக்கை விளக்கவுரை மற்றும் சிறப்புரையாற்றினார்.மாவட்ட பொருளாளர் V. தேவராஜ் நன்றி கூறினார். இதில் 16 பெண் ஊழியர்கள் உட்பட 62 பேர் கலந்துகொண்டனர்.






### நாகப்பட்டினம்

மத்திய வேளாண்மை சட்டங்களை திரும்பப்பெற வலியுறுத்தி டெல்லியில் போராட்டம் நடத்தும் விவசாயிகளுக்கு ஆதரவாக, மத்திய அரசு விவசாயிகளை அழைத்துப் பேசி பிரச்சனை களை தீர்க்க வேண்டும் என வலியுறுத்தி, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்ட மையம் சார்பில் நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில, 08.12.20 மதியம் ஆதரவு ஆர்ப்பாட்டம் மாவட்ட துணைத் தலைவர் கே.இராஜூ தலைமையில் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகள் குறித்தும், கடந்த 12 நாட்களாக விடாப்பிடியாக விவசாயிகள் போராடி வருவது குறித்தும் அவர்களுக்கு ஆதரவாக இந்தியா முழுவதும் பொது வேலை நிறுத்தம் நடைபெறுவது குறித்தும் எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் எம்.காந்தி, ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி, இந்திய தொழிற்சங்க மையத் தலைவர் எஸ்.ஆர். இராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் ப.அந்துவன்சேரல் நன்றியுரையாற்றினார். 35 பெண்கள் உட்பட 100-க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




### பெரம்பலூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையமுடிவின்படி பெரம்பலூர் மாவட்ட மையத்தின் சார்பில் 08/12/2020 (செவ்வாய்க்கிழமை) மாலை 5.46 மணி அளவில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்ட துணைத் தலைவர் இ.மரியதாஸ் தலைமையில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் மூன்று வேளாண்மைச்சட்டங்களை திரும்பப்பெற வலியுறுத்தியும் டெல்லி யில் நடைபெறும் விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. ஆர்பாட்டத்தில் மாவட்ட துணைத் தலைவர் தோழர் வி.கொளஞ்சி, மாவட்ட இணைச் செயலாளர் தோழர் முனைவர் கா.பால் பாண்டி, நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர்கள் சங்கத்தின் மாவட்ட தலைவர் தோழர் சுப்பிரமணியன், சத்துணவு ஊழியர்கள் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் தோழர் பெரியசாமி ஆகியோர் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பேசினார்கள். மாவட்ட செயலாளர் தோழர் ப.குமரிஅனந்தன் ஆர்ப்பாட்ட நோக்கம் குறித்து விளக்க உரை நிகழ்த்தினார். மாவட்ட பொருளாளர் தோழர் பெ.ராஜராஜன் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் அனைத்து துறை ஊழியர்கள், மாவட்ட, வட்டக்கிளை நிருவாகிகள், துறைவாரிச்சங்க நிர்வாகிகள் மற்றும் அனைத்து துறை முன்னணி ஊழியர்கள் கலந்து கொண்டார்கள்.



# அங்கோர் ஏழைக்கு ...எழுத்தறிவித்தல்!!!



ஏழை எளிய குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக இந்திய தொழிற்சங்க மையம் சென்னை அயனாவரத்தில் நடத்திவரும், நிர்மல் பள்ளி வளர்ச்சி குறித்து 15 நபர்கள் மட்டுமே கலந்து கொண்ட கலந்துரையாடல்...

நாகப்பட்டினம் அரசு ஊழியர் சங்க கூட்டரங்கில் சமூக இடைவெளியுடன், முகக்கவசம் அணிந்து சிஐடியூ மாவட்டத் தலைவர் தோழர் ஜீவா தலைமையில், மாவட்டச் செயலாளர் தோழர் சீனி.மணி மற்றும் பொதுச் செயலாளர் தோழர் ஜி.சுகுமாறன் ஆகியோர் பங்கேற்ற கூட்டம் 25.12.20 மாலை நடைபெற்றது.

தோழர்கள் ப.அந்துவன் சேரல், பா.ராணி மற்றும் அ.தி.அன்பழகன் ஆகிய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் தோழர் சு.சிவகுமார் ஏற்பாடுகள் செய்தார்.

ரூ.17,000/= வளர்ச்சி நிதியாக தோழர் சுகுமாரன் அவர்களிடம் வழங்கப்பட்டது.

பலரும் ஒத்துழைப்பு நல்குவதாக உறுதியளித்தனர்.

100-க்கும் குறைவான மாணவர்களுடன் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இதே பள்ளியை ஏற்று நடத்த இந்திய தொழிற்சங்க மையம் முன்வந்த நிலையில், இன்று 1000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயில்கின்றனர். இலவச சீருடை, மாலை இலவச தனி வகுப்புகள், அதில் பங்கேற்கும் மாணவர்கள் அனைவருக்கும் இலவச சிற்றுண்டி, இலவச கணினி வகுப்புகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் கொண்ட தமிழ்வழிக் கல்வி பயிற்றுவிக்கும் பள்ளியாக பத்தாவது வகுப்பு பொதுத்தேர்வில் 2019-ஆம் ஆண்டு 97.5 சதவிகித தேர்ச்சியும் பெற்று இப்பள்ளி சிறப்பாக பல நல்ல உள்ளங்கள் ஆதரவோடு நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## தோழர் MRA குடும்ப நல நிதி வழங்கல்



வேலைவாய்ப்பு பயிற்சித்துறையின் தமிழக அரசால் தமிழ்நாடு தொழிற்சங்கத்தின் சார்பில் பாதுகாப்பு நலநிதி ஊழியர்கள் செயல்படுத்தப்பட்டு சின்னசேலம் அரசின் நிலையத்தில் ஜி.பார்த்திபன் JTO மற்றும் பயிற்சிப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அலுவலர் MRA குடும்ப என்ற பெயரில் பங்களிப்புடன் வருகிறது. அதன்படி தொழிற் பயிற்சி பணிபுரிந்து வந்த அவர்கள் அகால மரணமடைந்ததால் அவரது மனைவிக்கு அத்திட்டத்தின்படி ரூ.100000/- (ரூபாய் ஒரு லட்சம்)த்தை 16.12.2020 அன்று வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் இயக்குநர் மரியாதைக்குரிய திரு.கே. வீரராகவராவ் IAS அவர்களால் காசோலை வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கூடுதல் இயக்குநர் சி.டி.ஆர். ராஜசேகர் BE, MBA, சங்கத்தின் மாநில நிர்வாகிகள் சின்னசேலம் கிளை நிர்வாகிகள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தென் சென்னை மாவட்ட தலைவர் சா.டேனியல் ஜெயசிங், TNITOA முன்னாள் மாநிலதலைவர் சி.இராமலிங்கம் உட்பட ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# ஜனவரி 19
# திருமெய்ஞானத் தியாகிகள் நினைவு நாள்

**எண்பதாம்** ஆண்டுகளில் இந்தியாவில் பன்னாட்டு நிதி நிறுவனத்தின் (ஐஎம்எப்) கட்டளைக்கிணங்க மேற்கொண்ட பொருளாதாரக் கொள்கைகள் நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. தேசத்தின் சுயசார்பும் ஒருமைப்பாடும் அபாயத்தில் சிக்கின. இந்திராகாந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசு ஏகாதிபத்தியவாதிகளின் நிர்ப்பந்தங்களுக்கு அடிபணிந்ததுடன் உலகவங்கி மற்றும் ஐஎம்எப் இடமிருந்து கடன் பெறுவதற்காக அவை விதித்த நிபந்தனைகள் அனைத்தையும் ஒப்புக் கொண்டது.

1982ல் நடைபெற்ற அந்த முதலாவது பொது வேலை நிறுத்தத்தில் பலியான 10 தோழர்களின் தியாகத்தை நினைவு கூறும் நாளான ஜனவரி 19ம் தேதியை தொழிலாளர்-விவசாயி ஒற்றுமை தினமாக கடைப்பிடிக்க வேண்டுமென சிஐடியு அறைகூவல் விடுத்து ஆண்டுதோறும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

மத்திய ஆட்சியாளர்களின் தவறான புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அதை அடியொற்றிய மாநில அரசுகளின் நடவடிக்கைகளால், மறைமுக வரிகளை உயர்த்தியும், ரயில் கட்டணம்- பால்கட்டணம்-சரக்குக் கட்டணம் -பெட்ரோலியப் பொருட்களின் விலையைக்

கடுமையாக உயர்த்தியும் மத்தளம் போல் மக்களை இரு பக்கமும்தாக்கினர் மத்திய மாநில ஆட்சியாளர்கள். ஏற்றுமதியை விட இறக்குமதி கிட்டத்தட்ட 9000 கோடி ரூபாய் கூடுதலாக இருந்தது. உள்நாட்டு கனரக இயந்திரத் தொழில் கடும் நெருக்கடிக்குள்ளாகியது. ஆக உள்நாட்டிலும் கடன் பொறி, வெளிநாட்டிலும் கடன் பொறி, அரசாங்க கஜானா திவால். இதிலிருந்து எழும் சுமைகளை உழைப்பாளி மக்களின்தலையில்சுமத்தமேற்கொள்ளப்பட்ட தொழிலாளர் விரோத- மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்து நாடுமுழுவதும் போராட்டங்கள் வலுவாக நடைபெற்ற காலம் அது.

சிஐடியு உள்ளிட்ட எட்டு மத்திய தொழிற் சங்கங்களும் 40-க்கும் மேற்பட்ட தொழில்வாரி

யான சம்மேளனங்களும் இணைந்து தேசிய பிரச்சாரக்குழு உருவாக்கப்பட்டு 1981ஆம் ஆண்டில் ஜூன் 4ஆம் தேதி மும்பையில் நடைபெற்ற சிறப்பு மாநாடு ‘‘தில்லியில் அணிவகுப்போம்’’ என்று முடிவு செய்தது. அறைகூவலை ஏற்று 1981 நவம்பர் 23 ல் நடைபெற்ற பேரணி தொழிற்சங்க -தொழிலாளி வர்க்க ஒற்றுமையின் மகத்தான வெளிப்பாடாக அமைந்தது. இது நம்நாட்டு தொழிற்சங்க இயக்கத்தில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

பல்வேறு தொழில்களிலிருந்தும், நிறுவனங்களிலிருந்தும் அனைத்து மாநிலங்களிலிருந்தும் மத்திய தொழிற்சங்கங்கள், சம்மேளனங்களைச் சார்ந்த தொழிலாளர்களும்-ஊழியர்களும் இவ்வளவு பெரியஎண்ணிக்கையில் திரண்டு வந்து தலை நகரில் ஆர்ப்பரித்தது முன் எப்போதும் நடந்திராத ஒரு நிகழ்வாகும். இந்த ஆர்ப்பாட்டத்தின் அணிவரிசையில் பொதுத்துறை-தனியார்துறை, ரயில்வே, பாதுகாப்பு, மத்திய-மாநில அரசு ஊழியர் அமைப்புகள், இரும்பு, நிலக்கரி, சுரங்கம், சணல், ஐவுளி, இன்ஜினியரிங், போக்குவரத்து, மின்சாரம் போன்ற

நிறுவனப்படுத்தப்பட்ட தொழில்களிலிருந்தும், தோட்டம், கைத்தறி, பீடி, கட்டுமானம், சுமை உள்ளிட்ட அமைப்பு சாரா தொழில்களிலிருந்தும் ஆயிரக்கணக்கில் அலைஅலையாய் திரண்டனர். உழைக்கும் பெண்களின் மிகப் பெரிய அணிவகுப்பு; அவரவர் தொழிற்சங்கப் பதாகைகளுடன் கலந்து கொண்டது தொழிற்சங்க இயக்கத்தின் இன்னொரு புதிய விழிப்பாகும். பேரணியின் முடிவில் 1982 ஜனவரி 19 அன்று ஒரு நாள் அகில இந்திய கண்டன வேலைநிறுத்தம்மேற்கொண்டு அரசின்கொள்கைகளை நிராகரிக்குமாறு 1981 நவம்பர் 23 பேரணி அறைகூவல் விடுத்தது.

ஜனவரி 19 அன்று வேலைநிறுத்த அறைகூவலைஏற்று வெளிப்பட்டஒற்றுமை,தொழிற்சங்க வரலாற்றிலேயே அதற்கு முன் கண்டிராதது. முக்கிய எதிர்க்கட்சிகளின் ஆதரவோடு பல இடங்களில் இந்த வேலைநிறுத்தம் பந்த் ஆக மாறியது.

ஜனவரி 19 வேலைநிறுத்த நாளன்று நாடு முழுவதும் 10 பேர் போலீசாரின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியானார்கள். தமிழகத்தில் எம்.ஜி.ஆர். ஆட்சியில் தொழிலாளர்களோடு இணைந்து நின்று போராடிய விவசாயஇயக்கத் தோழர்கள் மீது தமிழக அரசு தன் துப்பாக்கி முனையை நீட்டியது. இந்த துப்பாக்கிச் சூட்டிற்கு தியாகச் செம்மல்கள் அஞ்சான், நாகூரான், ஞானசேகரன் மூவரும் பலியானார்கள்.

மேலும் பெருமாள்நல்லூர், பிச்சங்கட்டளை, சீதை சிந்தாமணி, கண்ணங்குடி-சவுரியார்புரம், காலமாநல்லூர் உள்ளிட்ட கிராமங்களில் காவல்துறையினர் உள்ளே புகுந்து, ஆண்-பெண், குழந்தைகள் உட்பட அனைவரையும் மிருகத்தனமாக தாக்கியுள்ளனர். குடிசை வீடுகளிலிருந்த பண்டபாத்திரங்களையும் நொறுக்கி நாசமாக்கி சூறையாடினர். நூற்றுக்கணக்கான தோழர்கள் பெரும் காயமுற்றனர்.

திருமெய்ஞானம் வழக்கு மயிலாடுதுறை சப்கோர்ட்டில் சில ஆண்டுகள் நடைபெற்றது. குற்றத்தை நிரூபிக்க இயலாத நிலையில் 27.03.1989 அன்று வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மூன்று உயிர்களின்பலிக்கான நீதியும் நியாயமும் புரட்சித்தலைவர், மக்கள் திலகம் என போற்றப்படும் எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்த காலத்தில் காலவதியாகிப் போனது என்பதே கசப்பான வரலாறு.

மோடி தலைமையிலான 6 ஆண்டுகால பா.ஜ.க.அரசின் படுபிற்போக்குத்தனமான கொள்கைகளால் இந்தியாவின் சகலபகுதி உழைக்கும் மக்களும், வேலையில்லா இளைஞர்களும் வரலாறு காணாத அளவில் பெரும் பாதிப்புக்களுக்கு ஆளாகினர். எனவேதான் இந்தியத் தொழிளி வர்க்கம் எவ்வாண்டும் இல்லாத அளவிற்கு 2020 நவம்பர் 26ல் 15 கோடிப்பேர் பங்கேற்புடன் அகில இந்திய வேலை வேலை நிறுத்தம் செய்து கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தது. எனினும் மத்திய அரசின் போக்கில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

1982 - ஜனவரி 19ல் பலியான தியாகிகளை நினைவு கூறலும் அத்தியாகத் தடத்தில் விவசாயிகள் தொழிலாளர்கள் ஒற்றுமையை உருக்கெனக் கட்டலும் ஒற்றுமையைக் குலைக்க ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை முறியடிக்கவும்

அனைத்து உழைக்கும் மக்களின் வாழ்வை வழிமறிக்கும் ஆட்சியாளர்களின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்க்கும் போராட்டங்கள் கூர்மையடைந்து வெற்றி காணவும் அயராது உழைப்போமாக.

**பெரணமல்லூர் சேகரன்**





# போராளிகளை அழிக்கலாம் போராட்டங்களை ஒருபோதும் அழிக்க முடியாது!

**மை டியர் காம்ரேட்!**

2019ஆம் ஆண்டு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டம், போராட்டத்தை விட்டுவிட்டு பேச வாருங்கள்" என்று அரசாங்கம் கூறிய அறிவுரையின் பேரில் விலக்கிக் கொள்ளப் பட்டது. ஆனால் அந்தப் போராட்டம் நடந்து கொண்டிருந்த போதும் போராட்டம் திரும்பப் பெற்ற பிறகும் ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது போராட்டத்தை தூண்டியதாக, பணிக்கு வந்தவர்களை தடுத்ததாக அனுமதியின்றி வேலைக்குவராமல் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக என்று பலதரப்பட்ட வகைகளில் துறைவாரி நடவடிக்கைகளும், பணியிட மாறுதல்களும் மேற்கொள்ளப் பட்டன.

போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் முதல் கோரிக்கையாக இருந்தது போராட்டத்தின்போது மேற்கொண்ட ஒழுங்கு நடவடிக்கைகளை திரும்பப் பெற வேண்டும் என்பதாகும். ஆனால் அரசாங்கமோ ஒழுங்கு நடவடிக்கைகளை திரும்பப் பெறாமல் போராடியவர்களின் மீது மேலும் பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு தன்னுடைய பச்சோந்தித் தனத்தை வெளிப்படுத்தியது. ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் அரசுக்கு மீண்டும் மீண்டும் வேண்டுகோள்கள் விடுத்தும் கோரிக்கைகள் வைத்தும் பழிவாங்கும் நடவடிக்கைகளை கைவிட முன்வராததோடு மட்டுமல்லாமல் பேச்சுவார்த்தைக்கும் அழைக்கவில்லை இதன் மூலம் அரசாங்கம் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒன்றை சொல்லிக்கொள்ள முயன்றது "இனிமேல் யாராவது போராட்டத்திற்குப் போய்ப் பாருங்கள் இதுதான் உங்களுக்கும் நடக்கும்" என்று ஒரு பய எச்சரிக்கை செய்திருக்கிறது. அதே சமயம் சங்கத்துக்காரர்களுக்கு ஒரு நக்கலான மிரட்டல் விடுத்திருக்கிறது "இனி மேல் நீங்கள் போராட்டம் நடத்த முடியுமா? உங்களுக்கு உங்கள் ஊழியர்கள் யாராவது ஆதரவு கொடுப்பர்களா? கொடுக்க முன்வருவார்களா பார்க்கிறோம்?" என்கிற நக்கல்.

இது எப்படியிருக்கிறது என்றால் கொள்ளைக்காரனை சிறையில் போட்டு அடைத்து விட்டால் கொள்ளை நின்றுபோகும். திருடனை சங்கிலி போட்டு பிணைத்து விட்டால் திருட்டு ஒழிந்துவிடும். கொலைகாரனுக்கு மரண தண்டனை கொடுத்து விட்டால் கொலைகள் நடக்காது என்று சொல்வதைப்போல் இருக்கிறது. இப்போது நீதிமன்றங்கள் கூட அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்துவதை கிரிமினல் குற்றங்களாக பார்க்கத் துவங்கியுள்ளன.

சாக்ரடீஸ் என்ற தத்துவஞானி மக்களை சிந்திக்கச் சொன்னதற்காக சிறையில் அடைக்கப்பட்டார். விசாரணையின்போது அவரிடம் அந்நாட்டு நீதிபதிகள் கூறினர்.

"எது சரி, எது தவறு என்பதைச் சட்டம் சொல்கிறது. எது பாவம், எது புண்ணியம் என்பதற்கும் மதம் போதும். என்ன உடுத்த வேண்டும். என்ன உண்ண வேண்டும் என்பதற்கு நடைமுறை, மரபு இருக்கிறது. நாட்டு மக்களை வழி நடத்த மன்னர் இருக்கிறார். நீ செய்ய வேண்டியது எல்லாம் அடக்கமாக. ஒழுக்கமாக, அனைத்தையும் ஏற்றுக்கொண்டு அதன்படி நடப்பது மட்டும்

தான். மாட்டேன், நான் சுயமாக சிந்திப்பேன் என்று சொல்வாயானால் நீ சமூகத்திற்கு எதிரானவன் ஆபத்தானவன் என்று அர்த்தம்.”

**அதற்கு சாக்ரடீஸ் நீதிபதிகளிடம் திருப்பி கேட்கிறார்.**

“மை லார்ட்ஸ், ஒவ்வொரு நாளும் புதிதாக விடிகிறது. ஒவ்வொரு சூரியனின் புதிய கதிர்கள் என்னைத் தீண்டுகின்றன. நான் மட்டும் ஏன் பழைய சிந்தனைகளைச் சுமந்து கொண்டு திரிய வேண்டும்? மரபையும், கடவுளையும்,கேள்விகள் இன்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்? மன்னர் தவறே இழைக்காதவரா? அவர் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதா? நம்எல்லோருக்கும்சேர்த்துஅவரேசிந்திப்பார் என்றால் அவர் ஆட்சி நடத்தும் இடத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் தனித் தனியே ஒரு மூளை ஏன் இருக்கிறது? என் கேள்விகள் அனைத்திற்கும் ஏற்கெனவே பெரிய மனிதர்கள் விடை கண்டு பிடித்து விட்டார்களென்றுநான்அதைஅடக்கிவைக்க வேண்டுமா? நான் அடங்க மறுத்தால் அந்த மூளையை சங்கிலி போட்டுக்கட்டி சிறையில் ஒரு இருளடைந்த மூலையில் போட்டு விட வேண்டுமா?”

சாக்ரடீஸ் அப்படி பேசுவதைக் கேட்ட நீதிபதிகள், “ஐயோ இந்தக் கிழவன் எப்படி யெல்லாம் பேசுகிறான் பாருங்கள்? இவனை உடனே கொல்லுங்கள்” என்கிறார்கள், தன்னை சிறைச்சாலையில் இருந்து ரகசியமாக மீட்டுக்கொண்டு போக வந்திருந்த கிரிட்டோவிடம் இதை கூறிவிட்டு பலமாகச் சிரிக்கிறார் சாக்ரடீஸ்

“ஏன் சிரிக்கிறீர்கள்?” என்று கேட்ட கிரிட்டோவிடம், “ஆயுதம் ஏந்திய நூற்றுக்கணக்கான காவலர்கள் நீதிமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நின்றுகொண்டிருந்த நிலையில் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கும் எழுபது வயது கிழவனான என்னைக் கண்டு நிதிபதிகளுக்கு பயம் என் மீதல்ல அந்த பயம்... என் சிந்தனைகள் மீது சிந்தனையின் அசலான வலிமை என்ன என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது”

“அய்யோ, நீதிபதிகள் அப்படி சொன்ன பிறகுமா நீங்கள் தப்பித்து ஓடாமல் அங்கேயே நின்று கொண்டிருந்தீர்கள்?” என்ற கேட்டான் கிரிட்டோ அதிர்ச்சியுடன்

“கிரிட்டோ, வலுவான சிந்தனை எப்போதும் தப்பித்து ஓட முயற்சிக்காது. அநீதிக்கு எதிராக நின்று போராடத்தான் அது விரும்பும்” என்றார் சாக்ரடீஸ்.

சாக்ரடீஸின் சிந்தனைக்கும், ஜாக்டோ - ஜியோ போராட்டத்திற்கும் வித்தியாசம் எதுவும் இல்லை அவர் கொண்டிருந்தது வலுவான சிந்தனை. அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் மேற்கொண்டது வலுவான போராட்டம் அரசாங்கத்தால் போராளிகளையும், சிந்தனையாளர்களையும் கொன்றுவிட முடியும் ஆனால் கனல் மூட்டியிருக்கும் போராட்டங்களையும் சிந்தனைகளையும் யாராலும் கொல்ல முடியாது.

“அய்யா வாருங்கள், இங்கிருந்தால் உங்களை கொன்றுவிடுவார்கள். உங்களை இச்சிறையிலிருந்து அழைத்துச் செல்லவே நான் இங்கு வந்தேன்.” என்று சொல்லும் கிரிட்டோவிடம் சாக்ரடீஸ் முத்தாய்ப்பாக சொல்கிறார்.

“அவர்கள் என்னைக் கொல்லட்டும், சாக்ரடீஸைஅரசும்சட்டமும்கொன்றொழித்து விட்டது என்னும் செய்தி மக்களுக்குச் சென்று சேரட்டும். அந்தச் செய்தி ஒரே ஒருவரை உலுக்கினாலும் போதும், சாக்ரடீஸ் அப்படி என்ன தவறு செய்துவிட்டார்? அவரை ஏன் கொல்ல வேண்டும்? என்னும் ஒரே ஒரு கேள்வியை அவர் கோபத்தோடு எழுப்பினால் போதும். அந்த ஒரு கேள்வி நூறு பேரைப் பற்றி கொள்ளும். நூறு ஆயிரமாகும், ஆயிரம் நூறாயிரமாக மாறும். அப்படி மாறும்போது நீதிமன்றமும் அரண்மனையும் அதிரும். மனிதனை அழிக்கலாம், அவன் சிந்தனையை அழிக்க முடியாது என்னும் உண்மை ஏதென்ஸைக் கடந்து உலம் முழுக்கச் சென்றடையட்டும்”

சாக்ரடீஸ் சொன்னது அரசு ஊழியர்களுக்கும் பொருந்தும், தங்களுக்கான உரிமைகளை அரசாங்கம் தர மறுத்துள்ள நிலையில் அதை கேட்டு போராடியதற்காக போராடிய சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட அரசு ஊழியர்கள் மீது பழி வாங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள அரசாங்கத்தை “போராடியவர்கள் அப்படி என்ன தவறு செய்து விட்டார்கள்? அவர்களை ஏன் பழிவாங்க வேண்டும்? அரசாங்கம் தரமறுத்த உரிமைகளைத்தானே அவர்கள் கேட்டார்கள்” என்னும் ஒரே கேள்வியை ஒவ்வொரு அரசு ஊழியரும், ஆசிரியரும் எழுப்பினால் போதும், அந்தக் கேள்வி கோடிக்கணக்கான மக்களை பற்றிக்கொள்ளும். 2006ல் நிகழ்ந்தது மீண்டும் நிகழும், போராடியவர்கள் மாறலாம் ஆனால் போராட்டங்கள் மாறுவதில்லை. அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்களுக்கான உரிமைகளை அரசின் கரங்களிலிந்து பெறும்வரை சாக்ரடீஸின் சிந்தனையைப்போல் நீதிமன்றங்களும், அரசாங்கமும் அதிரும் வகையில் இந்த போராட்டங்கள் கேள்வி எழுப்பிக்கொண்டே இருக்கும், “எங்கே எங்களது உரிமை?” என்று. எந்த அரசாங்கமும் போராளிகளை அழித்துவிட முனையலாம் ஆனால் உரிமைக்கான போராட்டங்களை அவர்களால் ஒரு போதும் அழிக்க முடியாது. அழிக்கப் பார்த்தவர்கள் அழிந்து போன சம்பவங்கள் தான் வரலாற்றின் வழிநெடுகிலும் உள்ளது. இந்த 2021ல் மீண்டும் ஒரு முறை அது நிகழும். அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மீண்டும் ஒரு முறை அதை நிகழ்த்திக் காட்டுவார்கள்.

**– ஜிஜி**



## பழுதிலா ஆண்டாய் புத்தாண்டு மலர்க

ஈறாயிரத் திருபதாம் ஆண்டு-நாட்டில்
இணையிலா ஆண்டெனத் தம்பட்ட மடித்தார்
ஈராயிரத் திருபதாம் ஆண்டோ-ஆரூடம்
பொய்யென ஓங்கி அறைந்த தன்றோ!
பல்லாயிரம் மக்களைக் கொரோனா தொற்று
பலிவாங்கி தேசம் மோசம் போனதே!
நல்லாயிருந்த மக்கள் முகமூடி அணிந்து
உயிருக் கஞ்சி உலவும்நிலை யானதே!

இத்தகைய ஆண்டே போய்மீண்டு வராதே
பட்டது போதும் இனியும்பட மாட்டோம்
இத்தகைய கொரோனா தொற்றோ முற்றாய்
தொலைந்து புதிதாய் பிறந்துவா ஆண்டே!
எத்தகைய பெருந்தொற்றும் பெருந்துயரும் தராத
புத்தாண்டாய் நல்லாண்டாய் வருக வருகவே
முத்தனைய மனிதம் மேவிடவே ஒன்றி
சாதிய வேற்றுமை போக்கிட வருகவே

கடந்த ஆண்டில் பறித்த உரிமைகள்
மீட்கப் போராடிய வேளாண் மக்கள்
இந்த ஆண்டிலும் விழிப்புடன் விளங்கிட
அனைவரும் இணைந்து வேளாண் காப்போம்
சொந்த மக்களைக் கூறு போட்டும்
மண்ணின் வளங்களைச் சூறையாடியும்
வெந்த புண்ணில் வேலெனப் பாயும்
மைய மாநில அரசுகள் அகற்றுவோம்

பொழுதெலாம் நாட்டின் செல்வங்கள் கொள்ளை
கார்ப்பரேட் புரிய கால்வருடும் அரசு
விழுதெலாம் தேச துரோகம் மேவிட
மக்களை ஓட்டச் சுரண்டும் கொடுமை
பழுதெலாம் முடிவு ஆகிட யாவரும்
இணைதலும் பொருதலும் அவசிய மாகிடும்
பழுதிலா ஆண்டாய் புத்தாண்டு மலர்க
பாட்டாளி வர்க்கப் போரது வெல்க

**பெரணமல்லூர் சேகரன்**

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## டிசம்பர்20, 2020 தருமபுரியில் நடைபெற்ற மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் பங்கேற்ற பிரதிநிதிகள் விவர தொகுப்பு:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கலந்து கொண்டவர்கள் | ஆண் | 394 | பெண் | 86 | | |
| வயது | 18 முதல் 25 வரை | 1 | 26 முதல் 35 வரை | 31 | 36 முதல் 45 வரை | 127 |
| | 46 முதல் 55 வரை | 213 | 56 முதல் 60 வரை | 107 | | |
| கல்வித்தகுதி | 10ஆம் வகுப்புவரை | 114 | +2 வரை | 82 | பட்டப்படிப்பு | 137 |
| | பட்டயப்படிப்பு | 68 | தொழில்நுட்பம் (ITI) | 6 | பட்ட மேற்படிப்பு | 73 |
| அரசு ஊழியர் சங்கத்தின் பொறுப்பு | மாநிலம் | 18 | மாவட்டம் | 230 | வட்டக்கிளை | 100 |
| துறைவாரி சங்கத்தின் பொறுப்பு | மாநிலம் | 188 | மாவட்டம் | 199 | வட்டக்கிளை | 45 |
| | மையம் | 20 | | | | |
| சங்க நடவடிக்கையில் ஈடுபட்டதால் பணி நீக்கம் செய்யப்பட்ட காலம் | இல்லை | 357 | 1-25 மாதம் | 109 | 25க்கு மாதத்திற்கு மேல் | 3 |
| சிறை சென்ற காலம் எத்தனை நாள் | இல்லை | 805 | 1-25 நாட்கள் | 160 | 25- 50 நாட்கள் | 8 |
| | 50 க்கு நாட்களுக்கு மேல் | 1 | | | | |
| பணியில் கலந்து கொண்ட அனுபவம் உண்டா | ஆம் | 460 | இல்லை | 20 | | |
| அரசு ஊழியர் சந்தாதாரா | ஆம் | 472 | இல்லை | 7 | | |
| இப்பணியின் பேரும் சந்தாதாரா | ஆம் | 318 | இல்லை | 152 | | |
| தாரங்கள் | நிரந்தர தாரம் | 247 | உதவியாளர் | 6 | உடன்தாரம் | 10 |
| | வைத்தாரம் | 39 | | | | |
| பணியின் தன்மை | காலமுறை ஊதியம் | 375 | சிறப்பு காலமுறை ஊதியம் | 89 | மதிப்பூதியம் | 9 |
| | தொகுப்பூதியம் | 7 | | | | |
| எந்த ஓய்வூதிய திட்டம் | பழையது | 289 | புதியது | 158 | சிறப்பு | 89 |
| கொரோனா தொற்றை எதிர்கொண்டவரா? | ஆம் | 68 | இல்லை | 415 | | |
| கொரோனா தொற்றால் குடும்பத்தில் யாரேனும் பாதிக்கப்பட்டவரா? | ஆம் | 42 | இல்லை | 442 | | |



# போராட்டத்திற்கு தள்ளப்படும் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள்!

இந்தியாவில் பாஜக தலைமையிலான மத்திய அரசு, கோவிட் -19 காலகட்டத்தில் கூட மக்களுக்கான எந்தவொரு பாதுகாப்பு மற்றும் மக்களுக்கான திட்டங்களையோ அல்லது கட்டமைப்புகளையோ அமுல்படுத்துவதற்கு பதிலாக அவர்களின் உள்ளார்ந்த மத அடிப்படைவாத அரசியல் நிகழ்ச்சி நிரல்களுடன், புதிய தாராளமய பொருளாதார மற்றும் தொழிலாளர் கொள்கைகளை கடுமையான மற்றும் தீவிரமான முறையில் செயல்படுத்தி வருகிறது. இந்திய அரசு தங்களின் தொழிலாளர் விரோத, மக்கள் விரோத முடிவுகள் மற்றும் தீர்மானங்களுடன் தொடர்கிறது.

இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பாதுகாப்புத் துறை, எரிசக்தி துறை, மருத்துவத் துறை, தொலைத்தொடர்பு, பெட்ரோ கெமிக்கல்ஸ் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகள்பல தனியார்மயமாக்கல் மற்றும் தாராளமயமாக்களுக்கு உட்படுத்தப்படுகின்றன. தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களின் மிகவும் உரிமைகள் மற்றும் சலுகைகள் மறுக்கப்பட்டு நாட்டின் முதலாளிகளின் இலாப நோக்கம் மற்றும் தவறான கொள்கைகளை பாதுகாக்க ஆர்வம் கொள்கிறனறது. அந்தக் கொள்கைகளை எளிதில் அமல்படுத்துவதற்காக, மத்திய அரசும் அவர்களின் ஆட்சியின் கீழ் உள்ள மாநில அரசுகளும் நாட்டில் மத்திய-மாநில சிவில் சேவைகள் மற்றும் பொது சேவை விநியோக முறைமையில் நீண்டகால மற்றும் கணிசமான சீர்திருத்தங்களையும் மாற்றங்களையும் சுமத்த முயற்சிக்கின்றன.

தற்போது இந்தியா கோவிட் -19 தொற்று நோயால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. கோவிட் -19 பாதிக்கப்பட்ட நபர்களில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. தொற்றுநோய் மற்றும் அதன்விளைவாகசமூக-பொருளாதார - கலாச்சார நிலைமைகளின் தாக்கம் காரணமாக இந்தியாவும் பல சவால்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்கிறது. போதிய சுகாதார உள்கட்டமைப்பு, மருத்துவத்துறை ஊழியர்கள் மற்றும் பிற கள ஊழியர்கள் இல்லாததால் இந்திய மாநிலங்களில் பெரும்பாலானவை தொற்று நோயுடன் போராடக்கூடிய நிலையில் இல்லை, அந்த மாநிலங்களின் பொது சுகாதார அமைப்பு, சுகாதார ஆராய்ச்சி மற்றும் விநியோக ஒழுங்குமுறை, முறை திறனும் இல்லை. தொற்று நோயால் உருவான கடுமையான சிக்கல்களைச் சமாளிக்க. பொது விநியோகம் மற்றும் அரசாங்க மானியங்கள் வழங்குவதன் மூலம் பொது மக்களின் கைகளில் பணப்புழக்கத்தை அதிகரிப்பது, சுகாதார நிர்வாக முறையை வலுப்படுத்துவதன் மூலம், அடிப்படை கோவிட் -19க்கான சிகிச்சை வசதிகளை வலுப்படுத்துவதன் மூலம் மட்டுமே, நிலைமையை நாம் சமாளிக்க முடியும்.இடதுசாரிகூட்டணியால் ஆட்சிசெய்யப்படும் ஒரே ஒரு மாநிலமான கேரளாவில், கோவிட் -19 தொற்றுநோய்க்கு நோயாளிகளின் மீதான கவனிப்பு மற்றும் பிற சமூக-பொருளாதாரங்களை வெற்றிகரமாக நிர்வகித்து இதுபோன்ற அரசியல், தொழில்நுட்ப மற்றும் மருத்துவ பிரச்சினைகளை கையாண்டு வருவதன் மூலம் மக்களுக்கான மாற்று வழிமுறைக்கு இடது ஜனநாயக முன்னணி அரசு சிறந்த எடுத்துக்காட்டு. எனவே அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம்சரியாகசுட்டிக்காட்டி,கோவிட் -19 தொற்றுநோயால் உடனடி இழப்பை சந்திக்க மக்கள் நட்பு மற்றும் பணியாளர்கள் நட்பு ரீதியான நடவடிக்கைகளை உறுதி செய்யுமாறு யூனியன் மற்றும் மாநில அரசுகளுக்கு வலியுறுத்தியது. துரதிர்ஷ்டவசமாக, அவற்றில் சில மாநிலங்களைத் தவிர, மற்ற மாநிலங்கள்

அத்தகைய பொறுப்பை ஏற்கத் தவறிவிட்டன. ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் கட்டமைப்புகொண்ட மற்றும் அமைப்புசாரா துறைகள் தங்கள் வாழ்க்கையில் ஏராளமான பின்னடைவுகளை எதிர்கொண்டாலும். பெரும் பாலான விவசாயிகள் மற்றும் பண்ணைத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர் கள், போக்குவரத்துத் தொழிலாளர்கள், சாலையோர விற்பனையாளர்கள் உட்பட சுயதொழில் செய்பவர்கள் போன்றவர்கள் கோவிட் -19 தொற்றுநோயால் மோசமான சூழ்நிலையில் உள்ளனர். மோசமான வேலை யின்மை சூழ்நிலையால் நாட்டின் பெரும் பான்மையான வேலையற்ற இளைஞர்கள் கடுமையான சவால்களை சந்தித்து வருகிறார் கள். அதேசமயம்இ அரசு சேவை அல்லது பொது சேவைத் துறையில் புதிய காலியிடங்களை அல்லது எந்தவொரு வகையிலும் பதவிகளை உருவாக்க வேண்டாம் என்று மத்திய அரசு முடிவு செய்யப்பட்டுள்ளது. F.numoer 7 (2) - E. Coord-2020, office Memorandum on 04-09-2020 அரசாணையின் மூலம் அரசுப்பணிகளில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாது என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. தொழிலாள வர்க்கம் மற்றும் மத்திய அரசு ஊழியர்களின் ஆர்ப் பாட்டங்களைத் தூண்டுவதற்காக அரசாங்க ஊழியர்களுக்கு கட்டாய ஓய்வு திட்டத்தையும் அறிவித்துள்ளது.

28-08-2020 தேதியிட்ட 25013-03-2019-Estt-A-VI உத்தரவுப்படிஇ 30 ஆண்டுகள் சேவையை நிறைவு செய்தவர்கள் அல்லது 50-55 வயது பூர்த்தியடைந்த ஊழியர்கள் பணியிலிருந்து கட்டாய ஓய்வுக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த நோக்கத்திற்காக, ஒவ்வொரு காலாண்டு காலத்திற்கும் தற்போதைய பணியாளர்களின் பதிவேட்டை அரசாங்கம் தயாரிக்கும். அரசுப் பணியில் ஊழியர்களின் நேர்மையை பரிசோ திக்க உயர் அதிகாரம் கொண்ட குழுவை அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு எதிரான ஆட்சியாளர்களின் அராஜகவாத கூறு கள் மற்றும் மிருகத்தனமான பண்புகள் நம் நாட்டில் மீண்டும் மாற்றப்பட உள்ளன என்பதை இது குறிக்கும். மோடி ஆட்சியின் இரண்டாவது பதவிக்காலத்தில், அரசியலமைப்புக்கு எதிரான மற்றும் சட்டவிரோத சர்வாதிகார நடவடிக்கை கள் பொது சேவைகளில் ஒப்பீட்டளவில் அதிக அமைதியின்மையை உருவாக்கும், ஒற்றுமையின் தேவையை அதிகரிக்கும், மற்றும் அரசு சேவை துறையில் ஊழல் அதிகரிக்கும்.

உத்தரபிரதேசம், கோவா உள்ளிட்ட பாரதிய ஜனதா தலைமையிலான வலதுசாரி மாநில அரசுகள் தங்களது தொழிலாளர் விரோத கொள்கைகளை தொடர்கின்றன. இதற்கு எதிர் குரல் கொடுக்கும் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களின் உரிமைகளை வேண்டுமென்றே அழிக்க அத்தியாவசிய சேவை பராமரிப்பு சட்டத்தை (எஸ்மா) பயன்படுத்துவதற்காக உ.பி. மாநில அரசு 21-05-2020 அன்று எண் 3-இ.எம்கா-4-2020 உத்தரவுபிறப்பித்துள்ளது. கோவா மாநில அரசு எந்த விதமான வேலை நிறுத்தங்களையும், ஊழியர்களின் போராட்டத் தையும் தடை செய்ய ஒரு கொடூரமான உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த புதிய சூழ்நிலையில், தொழிலாளர் கள், ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் பெருமள வில் திரண்டு ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்க கொள்கை முடிவுகளுடன் போராடுவதற்கு மிக உயர்ந்த ஒற்றுமையுடன் தங்கள் இயக்கங்களை பலப்படுத்துகிறார்கள்.

எந்தவொரு நியாயமான நடைமுறை மற்றும் கல்வித்தகுதியின் அடிப்படையில் பின் பற்றப்படாத வகையில் இந்திய பாராளுமன்றத் தில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தொழி லாளர் குறியீடு சட்டம், இன்னும் அறிவிக்கப் படவில்லை, எனினும் அவை, ஒருங் கிணைக்கப்படுவதிலோ அல்லது அதில் உள்ள கருத்துக்களிலோ வெற்றிபெறவில்லை என்பது முற்றிலும் உண்மை. சமீபத்திய மூன்று தொழிலாளர் குறியீடு சட்டங்கள், தொழில்துறை உறவுகள் கோட், 2020, சமூக பாதுகாப்பு தொடர்பான குறியீடு, 2020, மற்றும் தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும்



பணி நிபந்தனைகள் கோட், 2020 ஆகியவை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு மிகவும் மோசமான நிலையில் தள்ளப்பட்டன. சபையின் மாடியில் எதிர்ப்பு இல்லாதது. இப்போது, இந்திய ஜனாதிபதியின் ஒப்புதலுக் காக சட்டங்கள் காத்திருக்கின்றன, இது நாட்டின் ஆளும் முன்னணிக்கு வழங்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும், ஏனென்றால் இந்த ஆண்டு இறுதிக்குள் அந்த சட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று சம்பந்தப்பட்ட அமைச்சரே குறிப்பிட்டார். உண்மையில், ஊதியக் குறியீடு சட்டத்தின் உள்ளடக்கத்தில் உள்ள விதிகளின் எண்ணிக்கை முந்தைய நான்கு சட்டங்களில் 119 இலிருந்து 67 ஆகக் குறைக்கப்பட்டது. இப்போதைய குறைந்த பட்ச ஊதியத்தின் 10,000 பிரிவுகள் 200 பிரிவுகளாக குறைக்கப்பட்டன. இச் சட்டத்தின் உள்ள விதிகளின் படி மத்திய அரசிடம் வழங்கப் பட்டுள்ள முழுமையாக அதிகாரம், ஊழியர்கள் மீது எதேச்சதிகாரத்தை ஏற்படுத்தும். மாநில அரசாங்கத்துடன் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வை 'நிர்ணயிப்பதற்கான நிர்பந்தத்தை மற்றும்; அதற்கான உரிமையை விட்டுக் கொடுப்பது என்பது இந்த தேசத்தின் அரசியல மைப்புச்சட்டம் மற்றும் கூட்டுபேர சக்தி முறையை முற்றிலும் மீறுவதாகும். எனவே, ஒவ்வொரு தற்போதைய காலகட்டத்திற்கும் சந்தை விகிதங்கள் மற்றும் வாழ்க்கை நிலைகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த பட்சஊதியங்களை பரிந்துரைக்கும் அதிகாரத்தி லிருந்து மாநில அரசுகள்தங்களை விலக்கிக்க கொள்ளும். தொழிலாளர்கள் மற்றும் தொழிலா ளர்களின் தகுதிகள் அல்லது தகுதியிழப்பு களை நிர்ணயிக்காமல் அவர்களின் உரிமை கோரல்களைத் தீர்மானிக்க 'தகுதிவாய்ந்த அதிகாரத்தை' நியமிப்பதற்கானமேம்போக்கான அதிகாரமும் சட்டத்தின் அமலாக்கத்தை மோசமாக்கும் மற்றும் தொழிலாளி வர்க்க நலன்களின் பாதுகாப்பை சீர்குலைக்கும். புதிய சட்டங்கள் நீதித்துறைக்கும் நிர்வாகத்திற்க்கும் இடையிலான அரசியலமைப்பு எல்லைகளை தெளிவாக மீறுகின்றன, சட்டங்களை மீறும் சந்தர்ப்பங்களில் முதலீட்டாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக தண்டனைகளை விதிக்கும் பொருட்டு அந்தந்த அதிகார வரம்புகளைக் கொண்ட நீதிமன்றங்களுக்குப் பதிலாக செயலாளர் நிலை அதிகாரிகளிடம் தண்டனை அதிகாரங்களை ஒப்படைப்பதன் மூலம். நீதித்துறை அதிகாரங்களை நிர்வாக அதிகாரங்களுடன் இணைப்பதன் மூலம், சட்டத்தை உருவாக்குபவர்களும் ஆளும் அரசாங்கமும் அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பு கோட்பாடுகளை நிராகரிக் கின்றன. முன்மொழியப்பட்ட சட்டம் ஒழுங்கமைக்கப்படாத துறையை உள்ளடக்கிய அதிகப்படியான எண்ணிக்கையிலான ஊழியர் கள் மற்றும் தொழிலாளர்களை உள்ளடக்கு வதில்லை, மேலும் சுயசார்புடைய இந்தியாவில் ஒரு வரலாற்று மற்றும் கலாச்சார முயற்சியாக குறியீடுகளை அழைப்பதற்கான பிரதமரின் பேச்சில் எந்த நியாயமும் இல்லை.

இந்தியாவில் உள்ள விவசாயிகள் மாநிலங் களவையில் கில்லட்டின்மூலம் சாதகிக்கும் படியான ஜனாதிபதியின் ஒப்புதலுடன் கூடிய விவசாய சந்தை சீர்திருத்த சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்துவீதிகளில் இறங்கியுள்ளனர். இந்த சட்டங்கள் விவசாயத்தை கார்ப்பரேட் செய்ய முடியும் என அரசியல் வல்லுனர்கள், உழவர் குழுக்கள், பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். தற்போதுள்ள Hblibe வர்த்தகம், சந்தைப்படுத்தல் ஆகியவை மாநில அரசு களின் வருவாயை பாதிக்கின்றன. மற்றும் அரசாங்க கொள்முதல் முறையை உத்தரவாத விலையில் நீர்த்துப்போகச் செய்யலாம் என்று கவலை தெரிவித்துள்ளன.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் வர்த்தக மற்றும் வர்த்தக (ஊக்குவிப்பு மற்றும் வசதி) சட்டம், விவசாயிகள் தங்கள் விளைபொருட் களை அறிவிக்கப்பட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் குழு (ஏபிஎம்சி) வர்த்தகத் திற்கு வெளியே எந்த மாநில வரிகளையும் கட்டணங்களையும் செலுத்தாமல் விற்க அனு மதிக்கிறது. விலை உத்தரவாதம் மற்றும் பண்ணை சேவைகள் சட்டம் குறித்த விவசாயி கள் (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாப்பு)

ஒப்பந்தம் எந்தவொரு உத்தரவாத விலையுமின்றி கூட ஒப்பந்த வேளாண்மை மற்றும் நேரடி விற்பனைக்கு உதவுகிறது. அத்தியாவசிய பொருட்கள் (திருத்தம்) சட்டம் கூடுதல் சாதாரண சூழ்நிலைகளைத் தவிர்த்து தானியங்கள், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் மற்றும் வெங்காயம் உள்ளிட்ட முக்கிய உணவுப்பொருட்களின் உற்பத்தி, சேமிப்பு, இயக்கம் மற்றும் விற்பனையை ஒழுங்குபடுத்துகிறது.

இந்தச்சட்டங்கள் நாட்டின்விவசாயிகளுக்கு அதிக தேர்வு அடிப்படையிலான சூழ்நிலையை வழங்கும், சிறந்த விலைகளுக்கு வழிவகுக்கும் அதிக போட்டி, விவசாயத் துறையில் தனியார் முதலீட்டின் அதிகரிப்பு மற்றும் பண்ணை சந்தைப்படுத்தல், பதப்படுத்துதல் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றை ஆளும் அரசாங்கம் நம்புகிறது மற்றும் பிரச்சாரம் செய்கிறது. அரசாங்க விதிமுறைகள் மற்றும் தலையீடுகளை நீக்குவது நாட்டின் கார்ப்பரேட் முதலாளிகளை நாட்டின் விவசாய கொள்முதல் தளத்திற்கு கொண்டு வரும் அதே வேளையில், அவை மிகவும் தேவையான முதலீட்டைக் கொண்டு வந்து விவசாய மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் சிறிய, குறு விவசாயிகளை பேரம் பேசும் சக்தியை பலவீனப்படுத்தும்.

இந்தியாவில் உள்ள யூனியன் அரசாங்கம், கார்ப்பரேட் நலன்களுக்கு வாய்மொழியாக சேவை செய்வது, உழவர் எதிர்ப்புச் சட்டங்கள் மூலம் நாட்டின் விவசாய நிலங்களை கார்ப்பரேட்டுகளின் கைகளுக்கு கிட்டத் தட்ட பரிசளித்தது, விவசாயிகளை அடிமைப் படுத்தியது மற்றும் அவற்றை பெருநிறுவனங்களின் வெறும் சேவையாளர்களாக மாற்றியது, அரசங்கங்கள் நாட்டின் வேளாண் துறைக்கு வெகு தொலைவில் உள்ளது.

உலகில் எல்லா இடங்களிலும் இருப்பது போல, இது தொற்றுநோய் காலத்தில் இந்தியாவில் முன்னோடியில்லாத மற்றும் அறிமுகமில்லாத சூழ்நிலை. அனைத்து ஊழியர்கள், தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் கடுமையாக உழைத்து வைரஸ் நோயைக் கட்டுப்படுத்தவும் குறைக்கவும் ஈடுபட்டுள்ளனர். அதிகமான நபர்களின் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. இந்திய அரசாங்கமும் பல மாநில அரசுகளும் தமது தொழிலாளர்க்க எதிர்ப்புக் கொள்கைகளைத் தொடர்கின்றன. அன்புள்ள கொடுப்பனவுகள் ஏப்ரல், 2021 வரை முடக்கப்பட்டன, சம்பாதித்த விடுப்பு சரணடைதல் தடைசெய்யப்பட்டுள்ளது, பூட்டப்பட்ட காலத்தில் சம்பளக் குறைப்பு ஊழியர்களுக்கு ஊதியம் மற்றும் சலுகைகளை பறிமுதல் செய்வதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. அத்தியாவசிய சேவைகள் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் போன்றவற்றில் உள்ள இருக்கைகள் காலியாக இருந்தன, ஏழைகள், பசி, பட்டினி, உதவியற்ற நபர்களின் இழப்பில் கார்ப்பரேட்டுகளுக்கு பிணை வழங்க தொழிலாளர் சட்ட திருத்தங்களை விதித்து, மின்சாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்கப் போகின்றன. நிலக்கரி, ஆற்றல் போன்றவை. நவம்பர் 26 அன்று நடந்த தேசிய வேலைநிறுத்தம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது.

உலகில்எல்லா இடங்களிலும் இடம்பெயர்வு என்பது ஒரு தீவிரமான பிரச்சினை. கலால் மற்றும் சுங்க வரிகளை அதிகரிப்பதன் மூலம் மத்திய அரசு பெட்ரோலிய பொருட்களின் விலையை அதிகரித்து வருகிறது. மேலும், எல்பிஜியின் விலை வழக்கமான அடிப்படையில் உயர்த்தப்பட்டு, மிகக் குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களுக்கு சுமையை அதிகரிக்கும்.

கேரளாவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அண்மையில் நடந்த தேர்தல்கள் எல்.டி.எஃப் அரசாங்கத்திற்கு மக்கள் அளிக்கும் ஆதரவின் ஒரு நடவடிக்கையாகும்.ஒரு புகழ்பெற்றகடந்த காலத்தைக் கொண்டுள்ளது, மேலும் சமூக பொறியியலை உங்கள் கடமையாக எடுத்துக் கொள்ள பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.